வார இதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM தේසියම්




மலர் - 02 | இதழ் - 29 | 24.10.2024 - 30.10.2024 | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12 | ஊக்குவிப்பு : ரூ.80.00



## ஜே.வி.பியின் மாறாத இனவாதமும் எதிர்க்க துணியும் தமிழ்த் தேசியமும்

தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை தலைவர் பா.கேதீஸ்வரன்

பக்கம் 09



## அரசியலில் இதெல்லாம் சகஜமில்லை


பக்கம் 05

## ஊடக அடக்கு முறைகளுக்கு: நீதி வழங்குமா அநுர அரசு?

பக்கம் 06



தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



# தமிழ் மக்களுக்கு தேவையான மாற்றம்

ஏழு தசாப்தங்களாக தமது விடுதலைக்காக போராடிவருகின்ற வட, கிழக்கை தாயகமாகக் கொண்ட தமிழ் மக்கள் மத்தியில் அண்மைய நாட்களில் 'மாற்றத்தை ஏற்படுத்துவோம்' என்ற நோக்கு நிலை தீவிரமடைந்துள்ளது.

தென்னிலங்கை பெரும்பான்மை சிங்கள மக்கள் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கு நிலையில் தேசிய மக்கள் சக்தி என்ற போர்வையில் வந்த ஜே.வி.பிக்கு ஆணை வழங்கியுள்ளார்கள்.

மூன்று சதவீதங்களாக இருந்த வாக்குவங்கியை 40சதவீதத்துகு மேலாக மாற்றியமைத்து தமது மாற்றத்துக்கான ஆணையை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

தென்னிலங்கை மக்களின் இத்தகைய செயற்பாடு தான் வடக்கிலும், கிழக்கிலும் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்ற நோக்கு நிலையை தீவிரப்படுத்துவதற்கு வித்திட்டுள்ளது.

தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசிய அரசியல் தளத்தில் உள்ள அரசியல் கட்சிகளுக்குள் காணப்படும் பிச்சல் பிடுங்கல்கள் தமிழ் மக்களுக்கு அரசியல் ஈடுபாட்டில் எரிச்சலை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த நிலைமையானது அவர்களை அரசியல் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கியிருப்பதற்கே வழிசமைப்பதாக மாறுமளவிற்கு தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இத்தயைகதொரு பின்னணியில் 'மாற்றத்தை ஏற்படுத்துவோம் கோசம்' தமிழ் மக்கள் மத்தியில் 'தமிழ்த் தேசிய கோட்பாட்டை' களைந்து 'பெருந்தேசியக் கோட்பாட்டை' இலகுவாகத் திணிக்கும் அபாயகரமான சூழலை தோற்றுவித்துள்ளது.

இந்தப் புரிதலை தமிழ்த் தேசிய தளத்தில் உள்ள எந்தவொரு அரசியல் கட்சியும் இதுவரையில் கொண்டிருக்கவில்லை. தத்தமது வாக்குவங்கிகளை நிரப்பிக்கொள்வதற்காக சக கட்சிகளுடன் முட்மோதிக்கொண்டுள்ளன.

விருப்பு வாக்குகளுக்காக தமது சக வேட்பாளர்களை வெட்டியோடும் திட்டங்களை தீட்டுவதிலும் தான் அதிகமான நேரத்தினை செலவிடுகின்ற நிலைமைகளும் உள்ளன.

தாயகத்தின் எதிர்காலம் சம்பந்தமாகவோ, தமிழ் மக்களின் இருப்பு சம்பந்தமாகவோ சிந்திப்பதற்கு நேரமில்லாதவொரு தரப்பாக தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் அவர்களின் பிரதிநிதிகளும் மாறியிருக்கின்றார்கள்.

மேற்கூறியதன் பிரகாரம் தமிழ்த் தேசியத் தளத்தில் தற்போது உருவாகியிருக்கின்ற 'வெறுமை நிலையானது' மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்ற கோசத்துக்குள் தமிழ் மக்கள் இலகுவில் ஈர்க்கப்படுவதற்கு வாய்ப்பாகிறது.

அவ்விதமான நிலைமையானது, கட்டுறுதி மிக்க தமிழ்த் தேசியத்தை சிதைப்பதற்கு கடந்த காலத்தில் உறுதுணையாகவிருந்த ஜே.வி.பியை வடக்கு, கிழக்கில் காலூன்றச் செய்வதற்கே வழிசமைக்கப்போகின்றது.

தமிழ்த் தேசிய அரசியலில் மற்றம் தேவை தான். அந்த மாற்றம் கொள்கை வழியில் பற்றுறுதியுடன், சலுகைகளுக்கு விலைபோகாத பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதாகவே இருக்க வேண்டும்.

தமிழ் மக்களுக்காக, வாழ்வியலின் முழுமையான பங்களிப்பை செய்யும் பிரதிநிதிததுவமாகவும், உரிமைகளுக்கான பயணத்தில் உறுதியான, சிந்தனை கொண்டதாகவும் அமைய வேண்டும்.

அந்த மாற்றத்தை தமிழ் மக்கள் தாராளமாக இந்த பாராளுமன்றத் தேர்தலை பயன்படுத்தி மேற்கொள்ள முடியும். அதனையே தமிழ் மக்கள் மாற்றத்துக்கான கோசமாகக் கொள்ள வேண்டும்.

தாயகம், தேசியம், தன்னாட்சி என்ற கோசங்கள் செயல்வடிவங்களாக்கும் பிரதிநிதித்துவ தெரிவே தமிழ் மக்களின் மாற்றத்துக்கான பிரதிபலிப்பாக இருக்க வேண்டும்.

## தேசியப் பார்வை

# தேசத்திரட்சி தமிழர் பிரதிநிதித்துவத்தில் தேவையில்லையா?

நடைபெற்று நிறைவடைந்த ஒன்பதாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தேர்தலில் 'தமிழ் மக்கள் தேசமாக திரள வேண்டும்' என்ற கோசத்துடன் தமிழ்ப் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டார்.

அதற்காக சிவில் அமைப்புக்கள் கூட்டிணைந்து தமிழ் மக்கள் பொதுச்சபையை உருவாக்கி பின்னர், அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பை உருவாக்கியிருந்தார்கள்

இந்தப் பொதுக்கட்டமைப்பு உருவாக்கத்தில் சிவில் அமைப்புக்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் சமத்துமவான அந்தஸ்து என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட உடன்பாடு குறித்து விமர்சனங்கள் உள்ளன.

விமர்சனங்களைத் தாண்டி பொதுக்கட்டமைப்பு முயற்சி கணிசமான அடைவினைக் கண்டிருந்தபோதும் குறித்த நிகழ்வின் பின்னர் சுமார் ஒன்றரை மாத இடைவெளியில் நடைபெறுகின்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழர்களின் பிரதிநித்துவங்களின் நிலைமை தான் பரிதாபமாக உள்ளது.

ஏனென்றால், தமிழ்களின் ஏகோபித்த ஆணைபெற்ற கட்சியொன்று மார்பு தட்டிக்கொண்ட இலங்கைத் தமிழரசுக்கட்சி உட்கட்சிப் பிரச்சினையால் சிதைந்துள்ளது. அதனுடன் கூட்டாக இருந்த தரப்புக்கள் தனித் தனியான அணிகளாக போட்டியிடுகின்றன.

தமிழரசுக்கட்சியின் அதிருப்திக்குழுவொன்று வேறு தனியாக களமிறங்கியுள்ளது. இதனைவிடவும் சுயேட்சைகள் தாராளமாக களமிறக்கப்பட்டுள்ளன. வழக்கம்போலவே விக்னேஸ்வரன் அணியும், கஜேந்திரகுமார் அணியும் தனியாக போட்டியிடுகின்றன.

நாடாளவிய ரீதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள 690 வேட்புமனுக்களின் கீழ் 196 பிரதிநிதிகளை நேரடியாகத் தெரிவு செய்வதற்காக 8,388 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இதில் தமிழ் மக்கள் தேசமாக திரளவேண்டும் என்ற கோசம் எழுப்பபட்ட தாயகமான வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள 6 ஆசனங்களுக்காக 23 அரசியல் கட்சிகள் மற்றும் 21 சுயாதீன குழுக்களிலிருந்து 396 வேட்பாளர்கள் களமிறங்குகின்றனர். வன்னி தேர்தல் மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள 6 ஆசனங்களுக்கு 24 அரசியல் கட்சிகள் மற்றும் 27 சுயாதீன குழுக்களிலிருந்து 459 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

மட்டக்களப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ள 5 ஆசனங்களுக்காக 27 அரசியல் கட்சிகள் மற்றும் 22 சுயாதீன குழுக்களிலிருந்து 392 வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். திருகோணமலை மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள 4 ஆசனங்களுக்காக 17 அரசியல் கட்சிகள் மற்றும் 14 சுயாதீன குழுக்களிலிருந்து 217 வேட்பாளர்கள் களமிங்குகின்றனர்.

திகாமடுல்லைக்கு (அம்பாறை) ஒதுக்கப்பட்டுள்ள 7 ஆசனங்களுக்காக 22 அரசியல் கட்சிகள் மற்றும் 42 சுயாதீன குழுக்களிலிருந்து 640 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இம்மாவட்டமே சிறிலங்காவில் அதிகமான அரசியல்கட்சிகளும், சுயேட்சகைளும், வேட்பாளர்களும் களமிறங்கிய பிரதேசமாக காணப்படுகின்றது.

இப்படியானதொரு சூழலில் தமிழ் மக்கள் தங்களின் பேரம்பேசும் பிரதிநிதித்துவத்தினை உறுதி செய்வது மிகவும் முக்கியமானது. அவ்வாறு உறுதி செய்வதற்கு வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு இருக்கின்ற ஒரே தெரிவு கொள்கைவழியில் உறுதியாகவும், சலுகைகளுக்கு விலைபோகாத தரப்பினையும் தெரிவு செய்வதுதான்.

அவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றபோது, ஏனைய அனைத்து தமிழ் அரசியல்கட்சிகள், சுயேட்சைக்குழுக்களை புறக்கணித்து ஏகோபித்த ஆதரவினை வழங்கி பெரும்பான்மை எண்ணிக்கைக்கான ஆணையை வழங்குதே உசிதமான நகர்வாக இருக்கும்.

இல்லையென்றால், மத்தியில் ஆட்சியில் இருக்கின்ற ஜே.வி.பி.தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் 'சமத்துவம்' என்ற கோட்பாட்டுக்குள் தமிழ் தேசியம் கரைந்து செல்வதற்கே வழியேற்படும்.

இந்த யதார்த்த புரிதல் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும், அதில் உள்ள புத்திஜீவிகளுக்கும் ஏன்புரிந்து கொள்ள முடிந்திருக்கவில்லை.

சங்குச் சின்னத்துக்கான தமது உழைப்புக்காக போராடிக்கொண்டிருக்கும் சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் ஏன் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவங்கள் ஒரு திட்சியாக பேரம்பேசும் சக்தியுடன் கொள்கையில் கட்டுறுதியாக இருக்க வேண்டும் என்று சிந்திக்கவில்லை என்ற கேள்வி இங்கே எழுகின்றது.

தமிழ் மக்களின் இருப்பு சார்ந்து சிந்திக்கும் சிவில் அமைப்புக்கள் நிச்சயமாக இந்த விடயத்தில் தமது தலையீட்டைச் செய்திருக்க வேண்டும். அரசியல் கட்சிகள் ஊடாக தமது அரசியல் கலாசார மாற்றுத்துக்காய் தொடர்ந்து செயலாற்றியிருக்க வேண்டும்.

ஆனால் சிவில் அமைப்புக்கள் அவ்வாறு சிந்திக்கவில்லை. சங்குச் சின்னத்தை அரசியல் கட்சி உரிமைகோரிவிடக்கூடாது என்ற நோக்கத்தினையே முன்னிலைப்படுத்தியிருந்தன.

அதுமட்டுமன்றி சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் சிலர் குறித்த அரசியல் தரப்பினரின் தேர்தல் ஆசன ஒதுக்கீடுகளில் வேட்பாளராகவும் களமிறங்கியிருந்தனர். இதனால், சிவில் சமூகத்தினர் தமக்குள் கூட்டான முடிவொன்றை எடுக்க முடியாத கையறு நிலைக்கு தள்ளப்பட்டனர் என்பது தான் உண்மை.

ஆகவே, தமிழ் மக்களுக்கான அரசியலை வழிநடத்துகின்ற திராணி சிவில் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இல்லை என்பது வெளிப்படையாகின்றது. அந்த வகையில் தமிழ் மக்கள் தீர்க்கமாகச் சிந்தித்து தமிழ்த் தேசிய அரசியல் செல்நெறியை உறுதி செய்யும் வகையில் ஆணையளிக்க வேண்டிய தருணம் தற்போது முன்னால் உள்ளது.

தம்மை வழிநடத்தப்போவது யார் என்பதையும், தலைமைகள் யார் என்பதையும் அடையாளம் காட்டும் தருணம் இது தான். அதனால் தமிழர் அரசியலில் பாராளுமன்றத் தேர்தல் முக்கியமானதொரு தருணம்.

# தமிழர்களுக்கு எதுவும் செய்யாதவர்களை தேர்தலில் ஓரம்கட்டுவது அவசியம்



## சட்டத்தரணி மணிவண்ணன் கோரிக்கை

தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாகவோ பொருளாதார ரீதியாகவோ எதுவும் செய்யாத தமிழ் அரசியல்வாதிகள் இன்றும் தேர்தலில் நிற்கின்றனர். அவர்களை தமிழ் மக்களும் ஓரம் கட்ட வேண்டும் என்று தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் மான் சின்னத்தில் முதன்மை வேட்பாளராக போட்டியிடும் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்கலைகழக மாணவனாக 2010ஆம் ஆண்டில் இருந்து அரசியல் பயணத்தை ஆரம்பித்தேன். ஒரு அரசியல் இயக்கமாக செயற்பட்டோம். பின்னர் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலத்தில் தேர்தலை புறக்கணிப்போம் என்று கூறினார்கள். நாம் தேர்தலை புறக்கணித்தால் ராஜபக்ஷ க்களின் ஆட்சி மீண்டும் வருமென கூறினோம்.

அதனை அவர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. 2020ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலோடு அவர்களோடு இணைந்து செயற்பட முடியாமென நாங்கள் அங்கிருந்து வெளியே றினோம்.

அதுபோன்று, சர்வதேச விசாரணைகள் தேவை என வடமாகாண சபை முதலமைச் சராக இருந்த சி.வி. விக்னேஸ்வரன் மாகாண சபையில் பிரேரணை நிறைவேற்றி யதை அடுத்து அவரை தமிழரசு கட்சி வெளியேற்றியது. அந்நிலையிலையே நாம் இருவரும் ஒன்றிணைய வேண்டிய காலத்தின் கட்டாயம் ஏற்பட்டது. நாம் தற்போது தமிழ் மக்கள் கூட்டணியாக பயணிக்கிறோம்.

எமது தேர்தல் பிரச்சாரங்களில் நாம் மற்றைய கட்சிகள் மீது சேறு வீசும் தேவை எமக்கு இல்லை. நாங்கள் என்ன செய்தோம், என சொல்லும் அளவுக்கு மக்களுக்கு நாங்கள் சேவை செய்துள்ளோம். அதனை முன்னிறுத்தியே எமது தேர்தல் பிரச்சாரங் கள் இருக்கும்.

தென்னிலங்கையில் பழைய அரசியல்வாதிகளை தென்னிலங்கை மக்கள் ஓரம் கட்டி விட்டனர். அவர்களும் அரசியலில் இருந்தும் ஒதுங்கிக்கொண்டனர். ஆனால், தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாகவோ பொருளா தார ரீதியாகவோ எதுவும் செய்யாத தமிழ் அரசியல் வாதிகள் இன்றும் தேர்தலில் நிற்கின்றனர். அவர்களை தமிழ் மக்களும் ஓரம் கட்ட வேண்டும்.

மாநகர முதல்வரால் ஒருவரால் இப்படியெல்லாம் செய்ய முடியும் என செய்து காட்டினோம். அதேபோன்று எமக்கு பாராளுமன்ற உறுப்புரிமை கிடைக்கும் போது, பாராளுமன்ற உறுப்பினரால் இதெல்லாம் செய்ய முடியுமா? என்று நீங்கள் வியக்கும் அளவுக்கு செய்து காட்டுவோம். நீங்கள் விரும்பும் மாற்றம் எம் ஊடாக கிடைக்கும் என உறுதி அளிக்கிறேன் என்றார்.

# தமிழ்த் தேசியத்தில் பிறழாத பிரதிநிதியாகவே செயற்பட்டேன்



## சிவஞானம் சிறிதரன் சுயவிளக்கம்

ஈழத் தமிழர்களை அரசியல் வெறுமை சூழ்ந்த காலத்தில் இனத்துக்கே அடையாளம் தந்த தமிழ்த் தேசியத்தை கொள்கையாக வரித்து நாம் ஆரம்பித்த அரசியல் பயணத்தை அதேதளத்தில் நின்று பிறழாத பிரதிநிதிகளாக இதுவரை காலமும் முன்னெடுத்திருக்கிறோம் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி நகர வட்டார சமூக மட்ட அமைப்புகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியம் மட்டும் ஈழத் தமிழர்க ளுக்கான அடையாளம். அத்தகைய அடையாளத்தை நிரந்தரமாக பேணும் வகையிலான அரசியல் செல்நெறிகளின் மூலம் இனத்தின் இறைமையை மீட்கும் என் அரசியல் பணியும் பயணமும் தொடரும். எங்கள் அடையாளங்களை இழக்கத் துணியும் எந்த மாற்றங்களுக்கும் எமது இளைய தலைமுறையினர் உட்பட் டுவிடக்கூடாது என்றார். சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டிருந்ததுடன், கிளிநொச்சி மாவட்டத்தின் தமிழ்த் தேசியப் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யும் வகையில் தமது ஒத்துழைப்பை வழங்கத் தயாராகவுள்ளதாகவும் தெரிவித்திருந்தனர்.

# மாற்றம் என்று மக்களை ஏமாற்ற வேண்டாம்

### மைக்கல் ஜோன்சன் (தமிழகம்) தெரிவிப்பு



மாற்றம் என்று கூறி மக்களை ஏமாளிகள் ஆக்கி மொட்டை அடிக்கும் அரசியலைச் செய்ய வேண்டாம், மாற்றம் என்று சொற்பதத்தின் மீதே மக்கள் வெறுப்புக் கொள்ளுமளவிற்கு அச்சொல் வெறும் வெற்று வார்த்தையாகிப் போய் உள்ளது இனியாவது மக்களுக்கான அரசியலைச் செய்ய அனைவரும் முன் வர வேண்டும்.

மாற்றம் என்று மக்களை எமாற்ற விரும்பவில்லை என உண்மையை உரக்கச் சொல்லி மக்களை நாடி வரும் சுயேட்சை 21 ஐ ஆதரித்து லாந்தர் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய உணர்வாளர்களை வரவேற்று வாக்களிக்குமாறு தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவையின் தமிழக ஒருங்கிணைப்பாளர் மைக்கல் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

# தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து புதிய ஆட்சியாளர்களுடனும் பேசுவோம்



## அடித்துக்கூறுகிறார் ஞானமுத்து சிறிநேசன்

தேர்தல் முடிந்த பின்னர் ஆளும் கட்சி எதுவாக இருந்தாலும் தமிழ் மக்களின் பிரச்சினைகள், தொடர்பாக பேசவேண்டிய அவசியம் தமிழ் அரசு கட்சிக்கு நிச்சயமாக இருக்கிறது என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு தேர்தல் தொகுதிக்குட்பட்ட களுவாஞ்சிக்குடி நகரில் தேர்தல் பரப்புரைகளை மேற்கொண்டிருந்தனர். இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

தமிழர்களாகிய நாம் விலை போகாத தமிழரசு கட்சிக்கு வாக்களிக்க இருப்பதாக களுவாஞ்சிக்குடி பிரதேச மக்கள் என்னிடம் நேரில் தெரிவித்தார்கள்.

இந்நிலையில் இந்த பொதுத் தேர்தலில் பல்வேறுபட்டோர், பல்வேறு நோக்கங் களுக்காகவும், சுய நோக்கங்களுக்காகவும், களமிறக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் மக்கள் தமிழ் அரசு கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எமது கட்சி மூன்று அல்லது நான்கு ஆசனங்களை பெற வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு. மக்கள் இந்த விதத்தில் மிகவும் நியாயமாக சிந்தித்து தேர்தலில் வாக்களிக்க வேண்டும். மக்கள் இந்த தேர்தலில் சரியாக சிந்தித்து சரியான நபர்களை தெரிவு செய்ய வேண்டும்.

அதனால் எதிர்வரும் 14ஆம் திகதி எனது தமிழ் அரசு கட்சி வெற்றி பெற்றுள்ளது என்பதை நாம் கேட்க வேண்டும். எனவே மக்கள் வீடு சின்னத்துக்கும் எனது 6ஆம் இலக்கத்துக்கும் வாக்களிப்பதோடு மக்கள் விரும்பும் ஏனைய இரு வேட்பாளர்களுக்கும் தமது வாக்குகளை செலுத்த முடியும்.

விஷமத்தனமான செய்திகளை பரப்பக் கூடிய விதத்தில் சிலர் செயற்படுகின்றார்கள். அவையெல்லாம் அழுக்காறு, காழ்ப்புணர்ச்சி காரணமாக செய்யப்படுகின்ற செயற்பாடுக ளாய் இருக்கும். அவற்றை நாம் உதறித் தள்ளிவிட்டு ஊழல், மோசடி, இலஞ்சம், கையூட்டல், இல்லாமல் அரசியல் செய்யக் கூடியவர்களையும் மக்களுக்கு சரியாக வழிகாட்டக்கூடிய வேட்பாளர்களையும் மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

அதன் அடிப்படையில் கடந்த காலத்தில் எமது பணிகள் சகல மக்களையும் பிரதேசங் களையும் மையமாகக் கொண்டு தான் எமது செயற்பாடுகள் நடைபெற்றன. அதற்கான ஆதாரங்களை இப்போது மக்கள் வெளிப் படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

எனவே நான் மீண்டும் தெரிவு செய்யப்ப டுகின்றபோது தமிழ் மக்கள் வாழ்கின்ற அனைத்து கிராமங்களுக்கும் எங்களுடைய உண்மையான, நேர்மையான பணிகளை மேற்கொள்வேன் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேர்தல் முடிந்த பின்னர் ஆளும் கட்சி எதுவாக இருந்தாலும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில், இனப் பிரச்சி னைக் கான தீர்வு தொடர்பாகவும், இன்னும் பல முக்கியமான பிரச்சினைகள் தொடர்பாக வும், பேசவேண்டிய அவசியம் தமிழ் அரசு கட்சிக்கு நிச்சயமாக இருக்கின்றது.

உண்மையில் பேசித்தான் ஆக வேண்டும். பேசுகின்றபோது அவர்கள் எவ்வாறு நடந்துகொள்ளப் போகின்றார்கள் என்பதுதான் எங்களுடைய எதிர்பார்ப்பாக இருக்கிறது. நீண்ட காலமாக 75 ஆண்டுக ளுக்கு மேலாக புரையோடிப் போயிருக் கின்ற இனப் பிரச்சினைக்கான தீர்வினை நாங்கள் பெறுவதற்காக அனைத்து கைங்க ரியங்களையும் பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்வோம் என்றார்.

# அமெரிக்காவின் உளவுத்துறையின் இரகசிய ஆவணங்கள் கசிவு

## ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதல் திட்டம் அம்பலம்

ஈரான் மீது தாக்குதல் நடத்துவது தொடர்பாக இஸ்ரேலின் முயற்சிகள் குறித்த அமெரிக்க உளவுத்துறையில் இரண்டு இரகசிய ஆவணங்கள் கசிந்துள்ளன.

அமெரிக்காவின் நேஷனல் ஜியோஸ்பாஷியல் இன்டலிஜென்ஸ் ஏஜென்சியில் இருந்த இந்த ஆவணங்களானது டெலிகிராமில் கசிந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த ஆவணங்களில் ஈரான் தாக்குதலுக்கு இஸ்ரேலிய படைகள் பிரத்யேக பயிற்சி எடுத்துவரும் மற்றும் தாக்குதளுக்கு ஒத்திகை பார்க்கும் செயற்றைக்கோள் புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளன.

முதல் ஆவணத்தில் இஸ்ரேல் விமானப்படை ஈரான் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்துவதற்கு எப்படியெல்லாம் தயாராகி வருகிறது என்ற விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

மற்றொரு வானத்தில் ஈரானுக்கு எதிராக இஸ்ரேல் தங்கள் ஏவுகணைகள் மற்றும் ஆயுதங்களை தயார்ப்படுத்தி வருவது குறித்த விவரங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய, கனடிய உறவைச் சிதைக்கிறார் பிரதமர் ட்ரூடோ

## வெளியேற்றப்பட்ட இந்திய உயர்ஸ்தானிகர் குற்றச்சாட்டு

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அரசியல் ஆதாயங்களுக்காக இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை சீர்குலைப்பதாக கனடாவில் இருந்து வெளியேற்றப்பட்ட இந்திய உயர்ஸ்தானிகர் சஞ்சய் குமார் வர்மா குற்றம் சாட்டியுள்ளார்.

ஆதாரங்களை முதலில் பகிர்ந்து கொள்ள வேண்டும், ஆனால் ட்ரூடோ பாராளுமன்றத்தில் ஒரு விடயத்தைப் பற்றி பேச முடிவு செய்தார். உறுதியான ஆதாரம் இல்லை என்று அவரே கூறியுள்ளார்.

உளவுத்துறையின் அடிப்படையில், நீங்கள் ஒரு உறவை அழிக்க விரும்புகிறீர்கள். கனடா பிரதமர் ஜஸ்டின் ரூடோ அரசியல் ஆதாயங்களுக்காக இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை சிதைத்துவிட்டார்.

கனடாவில் வசிப்பவர்களில் பெரும் பாலோர் காலிஸ்தானுக்கு ஆதரவான வர்கள். இந்தியாவுக்கு எதிரானவர்கள். கனடாவில் அரசியல்வாதிகள் மிகவும் புதியவர்களாக இருப்பதால், சர்வதேச உறவுகள் என்னவென்று அவர்களுக்குத் தெரியாது. உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியா, எந்தப் பகுதியிலும் சட்டத்துக்குப் புறம்பான கொலைகளைச் செய்யக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளது.

நிஜ்ஜார் கொலைக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை. இது தொடர்பாக பிரதமர் ரூடோ கூறியது ஆதாரங்களின் அடிப்படையில் அல்ல என்பது உறுதியாகியுள்ளது என்றார்.

# புதிய முறையில் தமிழ் வளர்ப்பு தஞ்சையில் அலைமோதிய மக்கள்



தஞ்சாவூரில் தலைக்கவசம் அணிந்து வரும் வாகன ஓட்டிகள் தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை பிழையின்றி முழுமையாக பாடி னால், 2 லிற்றர் பெட்ரோல் இலவசம் என்று ஜோதி தனியார் தொண்டு நிறுவனம் ஒரு நூதன போட்டியை அறிவித்தது.

தலைக்கவசத்தை அணிவது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக இந்த நூதன போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டியில் மாணவ, மாணவிகள், இரு சக்கர வாகன ஓட்டிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். இப்போட்டியில் 25 நபர்கள் சரியாக தமிழ்த்தாய் வாழ்த்தை சரியாக பாடி தலா 2 லிற்றர் பெற்றோலை இலவசமாக பெற்று சென்றுள்ளனர்.

# செயல்மொழி தான் அரசியலுக்கான தாய்மொழி

## நடிகர் விஜய் அறிக்கையில் சுட்டிக்காட்டு



வாய் மொழியில் வித்தை காட்டுவது நம் வேலையல்ல நம்மை பொறுத்தவரை செயல்மொழி தான் அரசியலுக்கான தாய்மொழி என்று தமிழக வெற்றிக் கழகத் தலைவரான நடிகர் விஜய் கூறியுள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

அரசியலை வெற்றி, தோல்விகளை மட்டுமே அடிப்படையாக வைத்து அளவிடாமல், ஆழமான அக உணர்வாகவும், கொள்கை கொண்டாட்ட மாகவும் அணுகப்போகும் அந்த தருணங்கள், மாநாட்டில் மேலும் அழகுற அமையட்டும்.

அரசியல் களத்தில், வாய் மொழியில் வித்தை காட்டுவது நம் வேலையல்ல நம்மை பொறுத்தவரை செயல்மொழி தான் அரசியலுக்கான தாய்மொழி.

மாநாட்டு களப்பணிகளில் மட்டுமல் லாமல், ஒட்டுமொத்த அரசியல் களப்பணிகளிலும், நாம் அரசியல்மய மானவர்கள் என்ற ஆழமான எண்ணத்தை, மக்கள் மத்தியில் தொண்டர்கள் உண்டாக்குவர் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

உற்சாகமும், உண்மையான உணர்வும் தவழும் தொண்டர்கள் முகங்களை, மாநாட்டில் காணப்போகும் அந்த தருணங்களுக்காகவே, என் மனம் தவம் செய்து காத்துக் கிடக்கிறது.

இந்த நெகிழ்வான நேரத்தில், முக்கியமான ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். கட்சித் தொண்டர்கள் எல்லாரையும் போலவே கர்ப்பிணியர், குழந்தைகள், நீண்ட காலமாக உடல் நலமின்றி இருப்போர், முதியோர் பலரும் தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் இருந்து, மாநாட்டிற்கு வர திட்டமிட்டு இருப்பர்.

அவர்களின் ஆவலை மிகவும் மதிக்கிறேன். மற்றவர்கள் எல்லாருடனும், அவர்களையும் மாநாட்டில் காண வேண்டும் என்ற ஆவல் எனக்கு இருக்கிறது.

ஆனால், எல்லாவற்றையும் விட அவர்களின் நலனே எனக்கு முக்கியம். மாநாட்டிற்காக நீண்ட துார பயணம் செய்வது, அவர்களுக்கு உடல் ரீதியாக சிரமத்தை ஏற்படுத்தக்கூடும். எனவே, சிரமப்பட்டு மாநாட்டுக்கு வர வேண்டாம்.

நாம் எதை செய்தாலும், அதில் பொறுப்புணர்வுடன், கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை காப்போம் என்பதை உணர்த்த வேண்டும்.

அப்போது தான் நம் செயல்கள் மிக நேர்த்தியாக அமையும். அரசியலுக்கும் அது பொருந்தும். நாம் எப்போதும் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாகவே இருக்க வேண்டும் எந்நாளும் இதை ஒரு கட்டுப்பாட்டு விதியாகவே கடைப்பிடிக்க வேண்டும் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஹிஸ்புல்லா இயகத்தின் உளவுப்பிரிவு தலைமையகத்தின் மீது தாக்குதல்

## முக்கிய மூன்று அதிகாரிகள் பலி

லெபனானின் பெய்ரூட் நகரின் தெற்கு பகுதியில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் உளவுப்பிரிவு தலைமையகத்தின் மீது இஸ்ரேல் இராணுவம் தற்போது நடத்திய தாக்குதலில், அதன் முக்கிய அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

எல்ஹாக் அப்பாஸ் சலாமே, ராச்சா அப்பாஸ் இச்சா மற்றும் அகமது அலி ஹசின் ஆகிய 3 பேர் கொல்லப்பட்டுள் ளனர். அத்துடன் நிலத்திற்கு அடியில் செயல்பட்டு வந்த ஆயுத தொழிற்சாலை ஒன்றும் சேதமடைந்துள்ளதாவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் இந்த தாக்குதலுக்கு, பதிலடியாக ஹிஸ்புல்லா அமைப்பு 100 ரொக்கெட்டுகளை ஏவியுள்ளது. அடுத்தடுத்து நடந்த இந்த தொடர் தாக்குதலால் வடக்கு இஸ்ரேல் பகுதியில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. அதனை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டு உள்ளனர்.

முன்னதாக, அல் குவார்த் அல் - ஹசன் மூலமே ஹிஸ்புல்லாவுக்கு ஈரானிடம் இருந்தும், மக்கள் நன்கொடையாகவும் வரும் பணம் பரிவர்த்தனை செய்யபடுகிறது. இதன்மூலமே தங்களின் ஆயுத தேவைகளை ஹிஸ்புல்லா பூர்த்தி செய்கிறது.

குறிப்பாக இந்த அல் குவார்த் வழக்கும் பொருளாதார சேவைகளை பல லெபனானிய மக்களும் பயன்படுத்தி வருவதால் இதன் மீதான தாக்குதல் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# புலம்பெயர் தமிழர்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை



## கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ

புலம்பெயர் ஏனைய பல்வேறு புலம்பெயர் சமூகங்களைப்போன்று கனடியவாழ் தமிழர்களும் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் பாதிக்கப்படுவதாகவும், அவர்களைப் பாதுகாப்பதற்கு இயலுமான சகல நடவடிக்கைகளையும் தாம் முன்னெடுக்கவேண்டும் எனவும் கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கனடாவின் தேர்தல் முறைமைகள் மற்றும் ஜனநாயகக் கட்டமைப்புக்கள் மீதான வெளியகத் தலையீடுகள் தொடர்பில் கடந்த 16ஆம் திகதி நடத்தப்பட்ட பகிரங்க நேர்காணலில் கலந்துகொண்டு பதிலளித்த கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ரூடோ, கனடாவைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் தமிழர் உரிமைகள் குழுவின் உறுப்பினர் கற்பனா நாகேந்திராவினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த பிரதமர் ட்ரூடோ, இக்குறித்த சம்பவம் தனக்கு மேலதிக தகவல்கள் தேவைப்படுவதாகக் குறிப்பிட்டார். இருப்பினும் ஏனைய பல்வேறு புலம்பெயர் சமூகங்களைப்போன்று கனேடிய வாழ் தமிழர்களும் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தான் ஏற்றுக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

எனவே புலம்பெயர் தமிழர்களைப் பாதுகாப்பதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் தாம் முன்னெடுக்கவேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

# அரசியலில் இதெல்லாம் சகஜமில்லை

நிலாந்தன்

வியட்நாமின் தந்தை என்று அழைக்கப்படும் கோசிமினின் வாக்கியம் ஒன்று உண்டு “மக்களிடம் செல்லுங்கள். மக்களுக்கு உண்மையைச் சொல்லுங்கள். மக்கள் உங்களுக்கு வெற்றியைப் பெற்றுத் தருவார்கள்” என்று.

மக்களுக்கு உண்மையைச் சொல்வதற்கு தமிழ் அரசியல்வாதிகளில் எத்தனை பேர் தயார்? கடந்த பல தசாப்தங்களில் தமிழ்கட்சிகளும் கட்சிகளின் தலைவர்களும் தமிழ்மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் எத்தனை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன? தமிழ்த்தேசியக் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளில் கூறப்பட்ட விடயங்களில் எத்தனை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன? அவை ஏன் நிறைவேற்றப்படவில்லை? எல்லாப் பழியையும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் மீது சுமத்திவிட்டு தமிழ் தலைவர்கள் தங்கள் தோல்விகளுக்குப் பொறுப்புக்கூறாமல் தப்பி வந்திருக்கிறார்களா? தங்களால் முடியாமல்போன விடயங்களுக்காக யாராவது தமிழ் மக்களிடம் மன்னிப்பு கேட்டிருக்கிறார்களா? கடந்த பல தசாப்த காலமாக தமிழ் அரசியலில் பொறுப்பு கூறாமை என்பது ஒரு பண்பாடாக வளர்ந்து விட்டது.

தலைமைத்துவம் என்பது வெற்றிக்கும் தோல்விக்கும் பொறுப்புக்கூறுவது. நல்லதுக்கும் கெட்டதுக்கும் பொறுப்புக் கூறுவது. வரவுக்கும் செலவுக்கும் பொறுப்புக் கூறுவது.ஆனால் தமிழ் அரசியலில் எத்தனை பேர் அவ்வாறு பொறுப்பு கூறியிருக்கிறார்கள்? தமது தேர்தல் அறிக்கைகளுக்கு எத்தனை பேர் பொறுப்புக் கூறியிருக்கிறார்கள்?

இந்த விடயத்தில் ஆயுதப் போராட்டத்தை தனியாக ஆராய வேண்டும்.ஆனால் ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரும் பின்னருமான மிதவாத அரசியலை தொகுத்துப் பார்த்தால் எத்தனை தலைவர்கள் தமது தோல்விகளுக்கு பொறுப்பு கூறியிருக்கிறார்கள்?

உள்ளதில் பெரியதும் மூத்ததும் ஆகிய கட்சி தமிழரசுக் கட்சி.அதற்கு ஆங்கிலத்தில் பெடரல் பார்ட்டி என்றும் பெயர் உண்டு. கடந்த 74 ஆண்டுகளாக, தனது பெயரில் உள்ள பெடரலை அதாவது சமஸ்டியை ஏன் அடைய முடியவில்லை என்பதற்கு அந்தக் கட்சி தன் மக்களுக்கு எப்போதாவது பொறுப்புக் கூறியிருக்கிறதா? தன் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத செல்வநாயகம்,அதற்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்காமல்,மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னாரா?

1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றியது தமிழர் விடுதலைக் கூட்டணி.சில ஆண்டுகளிலேயே,81ஆம்ஆண்டு மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தல்களை நோக்கிச் சரணடைந்தது.அதற்கு அவர்கள் பொறுப்புக் கூறினார்களா? மன்னிப்பு கேட்டார்களா?

நவீன தமிழ் அரசியல் வரலாற்றில் தமிழ்மக்கள் ஆகக்கூடிய நாடாளுமன்ற ஆசனங்களை பெற்றிருந்த காலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தேர்தல் கேட்ட காலகட்டம் தான். 22 ஆசனங்கள் கிடைத்தன. ஆனால் இலங்கைத்தீவின் அரசியல் வரலாற்றில் தமிழ் பிரதிநிதித்துவம் உச்சமாக இருந்த அக்காலகட்டத்தில்தான்,2009ஆம் ஆண்டின் முற்பகுதியில்,மிகக்குறுகிய காலகட்டத்திற்குள் அதிக தொகை மக்கள் இனஅழிப்பு செய்யப்பட்டார்கள். அதாவது ஆகக்கூடுதலான ஆசனங்களை தமிழர்கள் பெற்றிருந்த ஒரு காலகட்டத்தில்தான்,அதிக தொகை தமிழ்மக்கள் இனஅழிப்பு செய்யப்பட்டார்கள்.22 ஆசனங்களினாலும் அந்த இனஅழிப்பை தடுக்க முடியவில்லை. அது கூட்டமைப்பின் தோல்வியும்தான். அதற்கு கூட்டமைப்பு பொறுப்புக் கூறியதா?



2009க்குப்பின் கடந்த 15ஆண்டுகளிலும் தமிழ் கட்சிகள் தமது தேர்தல் அறிக்கைகளில் வெவ்வேறு வகைப்பட்ட வாக்குறுதிகளை வழங்கியிருக்கின்றன.இவற்றில் இத்தனை நிறைவேற்றப்பட்டன? நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளுக்கு எந்தக் கட்சியாவது பொறுப்புக்கூறியதா? அவற்றை நிறைவேற்ற முடியாமல் போனதற்கு மன்னிப்பு கேட்டதா?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது,தேசத்தைக் கட்டியெழுப்பும் வழியில் எதுவரை முன்னேறியுள்ளது?பரிகார நீதியை நோக்கி எதுவரை முன்னேறியுள்ளது?என்று தமிழ் மக்களுக்கு விளக்கம் கொடுக்குமா? இன அழிப்புக்கு எதிராக இலங்கை அரசைப் பொறுப்புக்கூற வைக்கும் விடயத்தில் ஏனைய கட்சிகளைவிட தான் நேர்மையாகவும் துணிச்சலாகவும் உண்மையாகவும் நடப்பதாகக் கூறும் முன்னணி, அந்த விடயத்தில் கடந்த 15 ஆண்டுகளில் எதுவரை முன்னேறியிருக்கிறது என்பதனை தமிழ் மக்களுக்கு எடுத்து கூறுமா? தன்னுடைய சமரசத்துக்கு இடமற்ற வெளியுறவுக் கொள்கை காரணமாக கடந்த 15 ஆண்டுகளில் தான் பெற்றுக்கொண்ட வெற்றிகளைக் குறித்து அக்கட்சி தமிழ் மக்களுக்கு உண்மை நிலவரத்தை எடுத்துக் கூறுமா?

எல்லாருமே தமிழ் மக்களின் மறதியின் மீதே தமது தேர்தல் வெற்றிகளை முதலீடு செய்கிறார்களா? ஆம் கடந்த 15 ஆண்டுகளாக மட்டுமல்ல, அதற்கு முன்னரும் பொறுப்புக்கு கூறாமை என்பது தமிழ் அரசியலில் ஒரு பண்பாடாகவே வளர்ந்துவிட்டது.தமிழ்க்கட்சித் தலைவர்களில் பலர் தமது தவறுகளுக்கும் தோல்விகளுக்கும் இயலாமைகளுக்கும் மன்னிப்புக் கேட்டதில்லை.அதாவது பொறுப்பு கூறியதில்லை.

ஆனால் கடந்த வாரம் தமிழ் மக்கள் பொதுச்சபையின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் ஊடகங்கள் முன்னிலையில் மக்களுக்கு உண்மையை கூறினார்கள் பொறுப்புக் கூறினார்கள்.

தமிழ்மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்பு ஏப்ரல் மாத கடைசியில் உருவாகியது.அது பின்னர் கட்சிகளோடு இணைந்து ஒரு பொதுக்கூட்டமைப்பை உருவாக்கியது.அப்பொது கட்டமைப்பு ஜனாதிபதி தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை முன் நிறுத்தியது.பொது வேட்பாளர் தமிழரசியலில் ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்ற ஒருவராக மேலெழுந்தார். அரசற்ற சிறிய இனம் ஒன்று அரசாங்கம் அறிவிக்கும் ஒரு தேர்தலை எப்படி வித்தியாசமாக படைப்புத் திறனோடு, விவேகமாக,கையாள முடியும் என்பதற்கு பொது வேட்பாளர் ஒரு முன்னுதாரணம். அரசற்ற மக்கள்,அரசாங்கம் அறிவிக்கும் ஒரு தேர்தலை எப்படி வெற்றிகரமாகக் கையாண்டு தமது கூட்டு விருப்பத்தை வெளிப்படுத்தலாம் என்பதற்கும் அது ஒரு முன்னுதாரணம்.

ஆனால் அந்த வெற்றியைக் கொண்டாட முடியாத அளவுக்கு சில நாட்களிலேயே நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. தமிழ்மக்கள் பொதுச்சபை தேர்தலில் பங்குபற்றுவதில்லை என்று முடிவெடுத்தது. அதனால் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகித்த இரண்டு கட்சிகள் கட்டமைப்பிலிருந்து விலகின. விளைவாக பொதுக் கட்டமைப்பு செயலிழந்தது.

தமிழ்மக்கள் பொதுச்சபையானது தொடர்ந்து பொதுக் கட்டமைப்பாக தேர்தலை எதிர்கொண்டிருக்க வேண்டும் என்ற விருப்பம் சங்குக்கு வாக்களித்த மக்கள் மத்தியில் பரவலாக காணப்படுகின்றது. ஒரு வெற்றியை காட்டிய பொதுகட்டமைப்பு அடுத்த தேர்தலில் தங்களுக்கு வழிகாட்டத் தவறிவிட்டது என்று அவர்கள் குற்றம் சாட்டினார்கள்.

தமிழ்மக்கள் பொதுச்சபைக்குள்ளும் இது தொடர்பாக வாதப்பிரதிவாதங்கள் நடந்தன. நாடாளுமன்றத் தேர்தலைக் கையாள வேண்டும் என்று ஒரு தரப்புக் கூறியது. ஆனால் தேர்தல்களை தொடர்ச்சியாக கையாள்வது ஒரு மக்கள் அமைப்பின் வேலை அல்ல என்று மற்றொரு தரப்புக் கூறியது.ஜனாதிபதித் தேர்தலை தேசத்தை திரட்டுவதற்கான ஒரு களமாக பயன்படுத்துவதே தமிழ் மக்கள் பொதுச் சபையின் இலக்காக இருந்தது.அதில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றியும் பெற்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கான களநிலவரம் அத்தகையது.ஆனால் நாடாளுமன்றத் தேர்தல் அத்தகையது அல்ல. அங்கே கட்சிகளும் சுயேச்சைகளும் விருப்பு வாக்குகளும் வாக்காளர்களை சிதறடிக்கும். அதாவது தேசத்தைச் சிதறடிக்கும். எனவே தேசத்தைச் சிதறடிக்கும் ஒரு தேர்தல் களத்தில் தாமும் இறங்கி மக்களைச் சிதறடிக்க முடியாது என்று பொதுச் சபைக்குள் ஒரு பிரிவு வாதிட்டது.

மக்கள் அமைப்பில் காணப்படும் கடற் தொழிலாளர் சங்கங்களும் விவசாய அமைப்புகளும் பாதிக்கப்பட்ட மக்களின் அமைப்புகளும் நாடாளுமன்றத் தேர்தலைக் கையாள வேண்டும் என்று கேட்டன.பொதுச்சபை குறைந்தபட்சம் சுயேச்சையாகவாவது இறங்கவேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டது.ஆனால் தேசத்தைக் கட்டி எழுப்புவது என்பது தேர்தல்களால் மட்டும் செய்யக்கூடிய ஒன்று அல்ல.ஆகக்கூடிய பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில்தான் ஆகப்பெரிய இனஅழிப்பு இடம்பெற்றது. எனவே தேசத்தைக் கட்டியெழுப்புவது என்பது தேர்தல்களுக்கும் அப்பால் பரந்தகன்ற தளத்தில் பல்வேறு கட்டமைப்புகளுக்கூடாக செய்யப்பட வேண்டும் என்று பொதுச் சபைக்குள் ஒரு பிரிவு வாதிட்டது.

முடிவில் பொதுச்சபை தேர்தலில் பங்கெடுக்கவில்லை.அதனால் பொதுக் கட்டமைப்பும் செயலிழந்து போனது. பொதுச்சபை தேரைக் கொண்டுவந்து தெருவில் விட்டுவிட்டது என்று குற்றம் சாட்டப்பட்டது.

அது தவறு. ஜனாதிபதித் தேர்தல் என்ற தேரை இழுத்த தமிழ்த் தேசியப் பொது கட்டமைப்பு அந்த தேரை தேர் முட்டிக்குள்தான் கொண்டு வந்து நிறுத்தியது. எனவே தேர் தெருவில் நிற்கிறது என்ற வாதம் சரியல்ல.மாறாக தொடர்ந்து தேர்தல் திருவிழாக்களை எதிர்கொள்ள தமிழ்மக்கள் பொதுச்சபை தயாரில்லை என்பதுதான் உரிய விளக்கம் ஆகும்.

இதுதொடர்பான இருதரப்பு விவாதங்களிலும் ஆழமான ஓர் உண்மை உண்டு. ஜனாதிபதி தேர்தலை தமிழ்மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்பு ஒரு தேர்தலாக அணுகவில்லை. அதற்குரிய அரசறிவியல் விளக்கத்தை அது கொண்டிருந்தது. ஆனால் அந்த விளக்கம் வாக்களித்த மக்களை முழுமையாக சென்றடையவில்லை. தமிழ்த் தேசிய வாக்காளர்கள் ஜனாதிபதி தேர்தலை ஒரு தேர்தலாகத்தான் பார்த்தார்கள்.

(9ஆம் பக்கம் பார்க்க)

# ஊடக அடக்குமுறைகளுக்கு: நீதி வழங்குமா அநுர அரசு?



**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

இலங்கைத் தீவில் சுயாதீனமாக கருத்துக்களை வெளிக்கொண்டு வந்த சிங்கள, ஆங்கில, தமிழ் ஊடகவிய லாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். தற்போது ஆட்சிபீடம் ஏறியுள்ள இடதுசாரி முலாம் பூசப்பட்ட அநுரவின் புதிய அரசு ஊடகர்கள் படுகொலைகளுக்கு நீதியை வழங்க வேண்டுமென பத்திரிகையாளர் சங்கம் கோரியுள்ளது. ஆயினும் தற்போது அநுரவின் புதிய அரசு நீதி வழங்குமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

**ஊடகங்களுக்கு எதிரான அடக்குமுறை**

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலையை அடுத்து இலங்கையின் ஊடகத்துறை கடும் நெருக்கடிக்கு உள்ளாகியது. ஈழப்போர் உச்சமடைந்திருந்த 2009இல் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலையை அடுத்து இலங்கையின் ஊடகத்துறை சில மாதங்களாக மௌனமாகியது.

சிங்கள ஊடகவியலாளர்கள் அடக்கப்படு வதிலும் மேலாக, ஈழத்தில் தமிழ் சுயாதீன ஊடகங்களை அடக்குவதற்கு வன்முறையைப் பயன்படுத்துவதிலும், அரச படைகளின் கொடூர தாக்குதல்களும் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகப் பணியாற்ற முடியாதவொரு சூழலுக்குள் தள்ளப்பட்டிருந்தார்கள்.

ஈழநாடு 1981இல் எரிப்பு முதல், பின்னர் இந்திய இராணுவத்தால் முரசொலி, ஈழமுரசு, நிதர்சனம் தகர்க்கப்பட்டதில் இருந்து தமிழ் ஊடகங்களின் மீதான அடக்குமுறை பல்வேறு காலங்களில் ஆதிக்க சக்திகளினால் பிரயோகிக்கப்பட்டது.

குறிப்பாக, ஊடகவியலாளர்களான நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரட்னம் சிவராம், சுப்பிரமணியம் சுகிர்தராஜன், செல்வராஜா ரஜீவர்மன், லசந்த விக்கிரமதுங்க, பரணிரூபசிங்கம் தேவகுமார், என்று சுதந்திர ஊடகத் துறையை காக்கவென அயராது உழைத்த எத்தனையோ தமிழ் பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

**சிங்கள ஊடகவியலாளர் கொலை**

இலங்கையில் 1990ஆம் ஆண்டு இன்ரர் பிரஸ் சேர்வீஸ் நிறுவனத்தின் ஊடகவியலாளன் றிச்சட் டி சொய்சா கடத்தப்பட்டு கொல்லப்பட்டதோடு இந்த நீண்ட கறைபடைந்த வரலாறு தொடர்ந்தது எனலாம். 28ஏப்ரல் 1990ஆம் ஆண்டு றிச்சட் டி சொய்சாவின் உடல் கண்டெடுக்கப்படுகிறது. அவரது உடலை அடையாளங்கண்டு கொண்டவர் தராகி என்ற தர்மரட்ணம் சிவராம் தமிழ் நெற் இணையத்தினுடைய ஆசிரியரான இருந்தவர். பின்னர் 28ஏப்பரல் 2005அன்று சிவராம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைப்பட்டியல் பின்னர் நீண்டு அதிகரித்து வந்துள்ளது. இதன்பின் தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப் பட்டுள்ளார்கள். உண்மைத்தகவல்களை வெளிக் கொண்டுவந்தார்கள் என்பதற்காக இவர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

தமிழ் ஊடகத்துறையில் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறை களையும் ஒடுக்குமுறைகளையும் வெளிக்கொண்டு வந்த ஊடகவியலா ளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டிருக் கின்றார்கள். அதுபோன்று சுயாதீனமாக கருத்துக்களை வெளிக்கொண்டு வந்த சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

**லசந்த விக்ரமதுங்க படுகொலை**

2015தேர்தலுக்கு முன்னரும் அதற்குப் பின்னரும் லசந்த விக்ரமதுங் கவின் குடும்பத்தாருக்கு கொலையில் தொடர்புடைய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படு வார்கள் என்று முன்னாள் அதிபர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்ததாக கூறப்படுகிறது.


லசந்த விக்கிரமதுங்க இலங்கை அரசுக்கெதிராகவும் பல அரசியல்வாதிகள் தொடர்பாகவும் ஆயுதக் குழுக்கள் தொடர்பாகவும் மிக



நீண்டகாலமாக மிகக் கடுமையான கட்டுரைகளை 'சண்டே லீடர்', 'மோர்னிங் லீடர்' மற்றும் ஞாயிறு சிங்களப் பத்திரிகையான 'இருதின' என்பன வெளியிட்டு வந்ததால் இவர் பல ஆண்டுகளாக்க தொடர்ந்து கடுமையான அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வந்திருந்தார்.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 15 வருடங்கள் ஆகின்றன. 2009ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி, சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர், சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டார். ஆயினும் இதுவரை முழுமையான தீர்ப்பு வரவில்லை.

## 'நீதி மறுக்கப்பட்ட லசந்த நிமலராஜன் கொலைகள்'



**லசந்த மீதான கொலை முயற்சிகள்**

லசந்தவைக் கொலை செய்வதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. 1995 பெப்ரவரியில் லசந்த அவரது வாகனத்திற்குள் வைத்துத் தாக்கப்பட்டார். 1998 ஜூனில் அவரது வீட்டின் மீது கிரனைட் வீசப்பட்டது. 2005 ஒக்டோபரிலும் 2007 நவம்பரிலும் சண்டே லீடர் அச்சகத்திற்கு தீவைத்து நிர்மூலம் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

2009, ஜனவரி 8 வியாழக்கிழமை காலை 09:30 மணியளவில் கொழும்பு கல்கிசையில் உள்ள 'லீடர் பப்ளிகேஷன்' அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்தபோதே துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர். தலையிலும் மார்பிலும் குண்டுகள் பாய்ந்து படுகாயமடைந்து மிகவும் ஆபத்தான நிலையில் இவர் உடனடியாக களுபோவில மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைக்குட்பட்டாலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

**நிமலராஜன் படுகொலை**

கொடூரமான போரால் இலங்கையில் பதற்றமான சூழல் நிலவிக் கொண்டிருந்த வேளையில் பலத்த அச்சுறுத் தல்களுக்கு மத்தியில் யாழ்ப் பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி வந்த நிமலராஜன் 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் 19ஆம் திகதி கொல்லப்பட்டார்.

ஆபத்துகளுக்கு மத்தியில் தொடர்ந்து போர் குறித்தும், மனித உரிமை மீறல்கள் மற்றும் அரசியல் நிகழ்வுகள் குறித்தும் பிபிசி தமிழ் உட்பட பல ஊடகங்களுக்கு செய்திகளை வழங்கி கொண்டிருந்தவர் நிமலராஜன்.

நிமலராஜனின் ஊடகப்பணி என்பது கடுமையான பணியாகதான் இருந்தது. ஈழப் போரின் மையப்புள்ளியாக இருந்த யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி கொண்டிருந்த மயில்வாகனம் நிமலராஜன் அவரது வீட்டில் வைத்து கொலை செய்யப்பட்டார். அவருக்கு ஆபத்துகளும் அதிகம் இருந்தன. பலதரப் பட்ட அரசியல் அச்சுறுத்தல்களும் இருந்தன. போர்க்காலத்தில் இலங்கையில் நடைபெற்ற பொதுதேர்தலில் ஏற்பட்ட வன்முறைகள் குறித்து அவர் செய்தி வழங்கினார். இலங்கையில் அரசியல் கட்சியாக இருக்கும் ஓர் கட்சி மோசடி செய்ததாகவும், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

நிமலராஜன் கொல்லப்பட்ட அன்றும் பத்திரிகை செய்தி ஒன்றை எழுதி கொண்டிருந்தார். அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் வீட்டிற்குள் புகுந்து நிமலராஜனை துப்பாக்கியால் சுட்டனர். நிமலராஜன் கொலை தொடர்பாக சில கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இன்று வரை இந்த கொலை குற்றம் யார் மீதும் நிரூபிக்கப்படவில்லை.

**நீதி மறுக்கப்பட்ட பத்திரிகையாளர்கள்**

அமெரிக்காவிலிருந்து பத்திரிகை யாளர்களுக்காக செயல்படும் 'கமிட்டி டு ப்ரொடக்ட் ஜேர்னலிஸ்ட்ஸ்" என்ற அமைப்பு 45பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கிறது.

ஆனால் இந்த எண்ணிக்கை 100க்கும் அதிகம் என்பதே உண்மையாகும். வட, கிழக்கு தமிழர் தாயக பகுதிகளில் மட்டும் 59க்கும் மேற்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்த படுகொலை செய்யப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் தொடர்பாக இதுவரை சொல்லிக் கொள்ளத் தக்க வகையில் இலங்கை சார்பாக எந்த விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்பதே வரலாற்று உண்மையாகும்.

ஆயினும் தற்போது ஆட்சி பீடம் ஏறியுள்ள மார்க்சிச முலாம் பூசப்பட்ட அநுரவின் புதிய அரசு ஊடகர்கள் படுகொலைகளுக்கு நீதியை வழங்க வேண்டும் என்றே பத்திரிகையாளர் சங்கம் கோரியுள்ளது. இதனை பரபட்சமின்றி அநுர அரசு முன்னெடுக்குமா என்பது தான் தற்போதைய கேள்வியாகின்றது.





**பாத்திமா சபா**
*மூன்றாம் வருடம்*
*ஊடக கற்கைகள் துறை*
*யாழ் பல்கலைக்கழகம்*

# பொது போக்குவரத்தும் பெண்களும்



அன்று அப்படித்தான் தேர்தலுக்காக எடுத்த விடுமுறையை குடும்பத்தோடு சேர்ந்து கழித்துவிட்டு குருணாகலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்தேன். வீட்டிலிருந்து விடுதிக்குப் போகும் ஒவ்வொரு நாளும் மனதில் ஓராயிரம் போராட்டங்கள் தொடரும். மீண்டும் எப்போது விடுமுறை கிடைக்கும். விரிவுரைகள் அத்தனையும் ஆரம்பித்து விட்டன, இனி நேரம் இருக்காது என்கின்ற எண்ண அலைகள் என்னை ஒரு புறமாக வாட்டி வதைக்க சன நெருக்கடியான பேருந்தில் யாருக்குச் செய்த புண்ணியமோ தெரியவில்லை எனக்கு ஒரு இருக்கை கிடைத்து விட்டது என்கின்ற திருப்தி ஒரு பக்கம். அப்படியே பெரும்பான்மையான ஆண்கள் இருக்கை இல்லாமல் நின்று கொண்டே அந்த அரச பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்தனர். அந்த இட நெரிசலில் இருக்கை இல்லாமல் நின்று கொண்டு ஒரு பெண். நான் நினைக்கிறேன் ஒரு முப்பது வயது போல் இருக்கும். முகத்தில் அத்தனை பதற்றம் அத்தனை தடுமாற்றம் அந்த முகம் தனியே ஒரு கதை சொன்னது.பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது.

இறைவனிடம் பிரார்த்திக்கிறேன் அந்த பெண்ணிற்கு ஒரு இருக்கை கிடைத்து விடட்டும் என்று. அந்தப் பெண்ணின் கையிலிருந்த பொதிகளை நான் வாங்கிக் கொள்கின்றேன். கொஞ்ச நேரம் கழித்து ஒரு 40 அல்லது 50 வயது இருக்கும் பார்ப்பதற்கு இரண்டு மூன்று குழந்தைகளின் தந்தை போலத் தெரிந்தார். குறித்த நபர் ஏற்கனவே அவதிப்பட்டுக் கொண்டு பயணிக்கும் அந்த பெண்ணை வேண்டுமென்றே உரசுவது போல் எனக்குத் தோன்றியது. மீண்டும் அந்தப் பெண்ணின் கைகள் மீது தன் கைகளை அழுத்தமாக வைப்பதும் எடுப்பதுமாக ஏகப்பட்ட அட்டகாசங்களைச் செய்து கொண்டிருந்தார். அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்தேன் எதையுமே கண்டு கொள்வது போல் இல்லை. ஒரு வேளை குறித்த நபர் குறித்த பெண்ணின் உறவினராக இருக்குமோ என்கின்ற எண்ணத்தில் நானும் அமைதியாக இருந்தேன்.

தனக்கு இதற்கு மேலும் பொறுத்துக்கொள்ள முடியாது என்கின்ற கட்டத்திலோ தெரியவில்லை. கோபம் நிறைந்த பார்வையில் அந்த நபரை அந்தப் பெண்ணின் கண்கள் உற்று நோக்கின. என் அருகிலிருந்த பயணி தனக்கான இடம் வந்ததும் இறங்கிச் செல்ல என் அருகில் அந்த பெண்ணை அழைத்து அமரச் சொன்னேன். ஏதோ ஒரு பதற்றத்திலேயே இருந்த அந்தப் பெண்ணை நோக்கி எதுவும் பிரச்சனையா என்று நான் வினவ, தன்னுடைய தாய் சுகவீனமற்று இருப்பதாகவும் வேலைக்காகத் தான் தூரத்தில் தங்கி இருப்பதாகவும் தற்போது தாயைப் பார்ப்பதற்காக அவசரமாகச் சென்று கொண்டிருப்பதாகவும் என்னிடம் கூற நானும் அமைதியாகக் கேட்டுவிட்டு ஆறுதல் கூறி சிந்திக்க ஆரம்பித்தேன். உண்மையில் அந்தப் பேருந்தில் பெரும்பான்மையாக ஆண்கள் தான் இருந்தார்கள் அந்த ஒருவனைத் தவிர வேறு எந்த ஆணும் அந்த பெண்ணையோ வேறு பெண்களையோ தவறாகப் பார்க்கவோ சீண்டவோ இல்லை குறித்த இந்த ஒருவன் மட்டும் அந்தப் பெண்ணை வேண்டும் என்றே சீண்டினான்.

நடந்ததை எல்லாம் அந்தப் பெண்ணிற்கு மற்ற பயணிகளிடமோ அல்லது பேருந்து நடத்தினரிடமோ, ஓட்டுநரிடமோ சொல்வதற்கு வாய்ப்பு அதிகமாக இருந்தது. ஆனாலும் அந்தப் பெண் மௌனம் காத்தது எப்படியாவது வீடு போய்ச் சேர வேண்டும். கூடவே தன் தாயைப் பார்த்து விட வேண்டும் என்பதற்காகத் தான் இருக்க வேண்டும். இப்படித்தான் சில பெண்கள் பொது போக்குவரத்துகளின் போது தான் எதிர்கொள்ளும் சவால்களைக் கூறுவதற்கு முன் வருவதில்லை. அதற்குப் பல காரணங்கள் உண்டு. அதற்காக அந்தப் பெண் குறித்த அந்த செயலுக்கு இடம் கொடுக்கிறாள் அல்லது உடன்பட்டுப் போகிறாள் என்று யாருமே தவறாக நினைத்து விடக்கூடாது. சில சூழ்நிலைகள் சில இடங்களில் நம்மை மௌனமாக்கி விடுகின்றது. ஏதும் சொல்வதற்குப் பெண்கள் வாய் திறந்தாலும் சமூகத்தின் பார்வையில் அவளே குற்றவாளி ஆகின்றாள். நீ ஏன் தனியாகச் சென்றாய், நீ ஏன் அப்படி ஆடையணிந்து சென்றாய், அவன் உரசும் போது நீ ஏன் இடமளித்தாய் என்கின்ற கேள்விகளுக்குப் பயந்தும் சில பெண்கள் எத்தனை கொடுமைகளை பொது போக்குவரத்துகளின் போது அனுபவித்தாலும் அதனை வாய் திறந்து சொல்வதற்குத் தயங்கிக் கொண்டு தான் இருக்கின்றார்கள்.

உண்மையில் பொது போக்குவரத்து என்பது சமூகத்தின் மிக முக்கியமான கட்டமைப்பாகும். இதன் மூலமாக நூற்றுக்கணக்கான மக்கள் தினமும் வேலைக்கு, பாடசாலைக்கு, கல்லூரிக்கு மற்றும் பிற தேவைகளுக்காகப் பயணிக்கின்றனர். குறிப்பாக, பெண்கள் சமகாலத்தில் ஆண்களுக்கு இணையாக பல்வேறு துறைகளில் பணிபுரிந்து வருகின்றனர். இச்சூழ்நிலையில், பொது போக்குவரத்து பெண்களுக்கு ஒரு நம்பிக்கையான பயண முறைமையாக அமைவதற்குப் பல சவால்கள் உள்ளன. இச்சவால்கள் பெண்களின் அன்றாட வாழ்க்கையை மிகவும் கடினமாக்குகின்றன. பெண்களைத் துன்புறுத்தும் சில வெளிப்படையான அல்லது மறைமுகமான செயல்கள், வாகனங்களில் பெண்களுக்கு ஏற்படுகின்ற வன்முறை, தனிமையில் பயணிக்கும் போது அவர்களுக்கு ஏற்படும் மன அழுத்தம் ஆகியவை அவர்களின் மனநலனுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இது அவர்களின் பயண அனுபவத்தை முற்றாக மோசமாக மாற்றுகின்றது.

அவ்வாறே பொது போக்குவரத்தில் பெண்கள் சந்திக்கும் மிகப்பெரிய சவால், அவர்களின் பாதுகாப்பு குறைபாடு ஆகும். பரபரப்பான நகரங்களில் மாலை நேரங்களில் அல்லது இரவு நேரங்களில் பெண்கள் பயணம் செய்வது மிகப்பெரிய சவாலாக உள்ளது. மிகுதியான வேளைகளில் பேருந்துகளில் அல்லது ரயில்களில் பயணிக்கும் போது, அவர்களுக்கு உகந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாததால் அவர்கள் சில தொந்தரவுகளுக்கும் ஆளாகின்றனர். பெண்கள் பொது போக்குவரத்தில் பல நேரங்களில் பாலியல் துன்புறுத்தல்களை எதிர்கொள்வது மிகப் பெரிய சிக்கலாக அமைகின்றது. பெண்கள் பேருந்து அல்லது ரயில்களில் நெரிசலுடன் பயணிக்கும் போது, எதிர்பாராத முறையில் தொந்தரவு செய்யப்படுகின்றனர். குறிப்பாக, நெரிசல் அதிகமாக இருக்கும் போது, பெண்களின் இடுப்புகளைத் தவறாகத் தொடுதல், அல்லது அவர்கள் மீது கைகளைக் வைத்தல் போன்ற செயல்கள் இடம்பெறுகின்றன.

சில நபர்கள் தம்மை நாகரிகமானவர்களாகவும் அப்பாவிகளாகவும் காட்டிக்கொண்டு இவ்வாறான இழிச் செயல்களைச் செய்கிறார்கள். அண்மையில் கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை மாணவி ஒருவர் தனது முகப்புத்தகத்தில் பதிவிட்ட காணொளி ஒன்றினை எனக்குப் பார்க்க கிடைத்தது. குறித்த காணொளியில் தன்னை தவறான எண்ணத்தில் தொட நினைத்த நபரின் செயலை அப்படியே பதிவு செய்து இருந்தார் அந்த மாணவி. உண்மையில் சமூகத்தில் இப்படியான விடயங்களை வெளிக்கொண்டு வருவது பாராட்டத்தக்கது. தவறுதலாகச் செய்வது போலும் அல்லது நித்திரை கொள்வதுபோலும் பாவனை செய்து கொண்டு தவறான எண்ணத்தில் பெண்களைத் தொட நினைக்கும் கேவலமான செயல்களைச் செய்பவர்கள் இந்த சமூகத்தில் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

சில நேரங்களில் விரிவுரைகளுக்காக குறுந்தூர பேருந்து பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும் தருணங்களில் நாம் கூட இப்படியான சீண்டல்களுக்கு ஆளாகின்றோம். பேருந்தின் பின் இருக்கையில் ஒரு கூட்டமாக அமர்ந்து கொண்டு கேவலமான வரிகளில் பாடல்களைப் பாடுவதும், தொலைப்பேசி இலக்கம் கேட்பதும் , நகைப்பதுமாக இருக்கும். இப்படியான செயல்களைப் பேருந்து நடத்துநர் கூட கவனத்தில் கொள்வதில்லை. கண்டும் காணாமலும் அவர்களும் கடந்து போகின்றார்கள் சில நேரங்களில் அவர்களும் சேர்ந்து நகைக்கும் தருணங்களையும் கண்டதுண்டு. எல்லா பேருந்து நடத்துநரும் இப்படிப்பட்டவர்கள் என்று கூறி விட முடியாது உண்மையில் சமூக அக்கறையோடு செயற்படக்கூடிய பேருந்து நடத்துநர்களையும் என் பயணங்களின் போது நான் கண்டதுண்டு.

பெண்கள் பல நேரங்களில் உடல் உருவத்தைப்பற்றி அல்லது நடத்தை குறித்த இழிவான வார்த்தைகளால் துன்புறுத்தப்படுகின்றனர். இது மனஅழுத்தம் மற்றும் பாதுகாப்பின்மையை உருவாக்குகிறது.பலசமயம் குறிப்பிட்ட பயணிகளால் பெண்கள் தொடர்ந்து பல இடங்களில் கடந்து செல்வதற்கு முயலும்போது அவர்களை மீண்டும் மீண்டும் பின் தொடரும் காட்சிகள் உருவாகின்றன. இது அவர்களுக்கு மனச்சோர்வு மற்றும் பயத்தை ஏற்படுத்துகிறது. உலகத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் ரீதியான வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. எத்தனை சட்ட ஏற்பாடுகள் இதற்கு எதிராக இருந்தாலும் குறித்த தருணத்தில் எந்த பாதுகாப்பையும் வழங்க முடிவதில்லை என்பதே உண்மை.

**(9ஆம் பக்கம் பார்க்க)**

# இணைய மோசடிகளை கட்டுப்படுத்தல் சீனாவின் அர்ப்பணிப்பும், முன்னேற்றமும்



சீனாவில் தொலைத்தொடர்பு மற்றும் இணையவழி மோசடி 1990 களில் தோன்றத் தொடங்கியது. அதன் பின்னர் பெருமளவில் பரவி ஏராளமான குடிமக்களை பாதித்தது.

சீனாவின் உயர்மட்டத் தலைவர்கள் இந்தப் பிரச்சினையில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். மக்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும், மூலாதாரத்திலும் விரிவான நிர்வாகத்திலும் கவனம் செலுத்த வேண்டும், கூட்டு நடவடிக்கை மற்றும் வெகுஜன தடுப்பு என்பன அடிக்கடி நிகழும் போக்கை உறுதியாகக் கட்டுப்படுத்துகின்றன.

சீன அரசாங்கம் தொலைத்தொடர்பு மற்றும் இணையவழி மோசடி தொடர்பில் அடிப்படைக் கொள்கைகளை நிலை நிறுத்துவது மற்றும் புதிய தளம், சிக்கல் நோக்குநிலை மற்றும் அமைப்புகளின் சிந்தனை ஆகியவற்றைக் கடைப்பிடிக்கிறது.

சீனா, தொலைத்தொடர்பு மற்றும் இணையவழி மோசடி குற்றங்களைத் தடுக்கும் பாதையைத் தொடர்ந்து ஆராய்கிறது. முன்னோடியில்லாத வரலாற்று சாதனைகளுக்கு வழிவகுத்த பல்வேறு பணிகளை ஆழமாக முன்னெடுத்துச் செல்கிறது.

2021ஆம் ஆண்டில் சீனாவில் தொலைத்தொடர்பு மற்றும் இணையவழி மோசடி வழக்குகளின் எண்ணிக்கை ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட ஐந்து மடங்கு அதிகமாக காணப்பட்டது. ஆனால் ஜூன் 2021 முதல் தொடர்ந்து 17 மாதங்களுக்குள் வருடந்தோறும் அவ்விதமான சம்பவங்கள் குறைந்துள்ளன.

இந்த நிலைமையானது தொலைத் தொடர்பு மற்றும் இணையவழி மோசடிகள் அங்கு அடிக்கடி நிகழும் போக்கைத் திறம்பட கட்டுப்படுத்துவதைக் வெளிப்படுத்துகின்றது. உலகில், தொலைத்தொடர்பு மற்றும் இணையவழி மோசடி குற்றங்கள் பல்வேறு நாடுகளில் வேகமாக வளர்ந்து பரவி, உலகளாவிய பொதுவான ஆபத்தாகவும், தீர்க்க வேண்டிய உலகளாவிய பிரச்சினையாகவும் மாறியுள்ளன.

சீனா இந்த உலகளாவிய பிரச்சினைக்கு வெற்றிகரமான நடைமுறையின் மூலம் தீர்வினை எட்டுவது தொடர்பில் ஆராய்ந்துள்ளது.

### சட்ட அமைப்பை மேம்படுத்த சிறப்பு ஆய்வினை வலுப்படுத்துதல்

தொலைத்தொடர்பு மற்றும் இணையவழி மோசடி குற்றங்கள் ஒரு சிக்கலான சமூக நிர்வாகச் சிக்கலைக் ஏற்படுத்துகின்றன. ஆகவே பல்வகைப்பட்ட, பல்வேறு நிலைகளில் உள்ள அனைத்து வகையான சிறப்பு ஆராய்ச்சி இலக்கு, துல்லியமான, திறமையான கட்டுப்படுத்தல் பணிக்கு முன்நிபந்தனையாகிறது. மேலும் இது திட்டமிடலின் அடிப்படையாகவும் வெற்றிக்கான முன்நிபந்தனையாகவும் உள்ளது.

இணையவழி மோசடி, பணம் செலுத்துதல், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நிர்வாகத்தை வலுப்படுத்துதல், புதிய வகை சட்டவிரோத, குற்றவியல் தொலைத்தொடர்பு, இணையவழி செயற்பாடுகளைத் தடுத்தல் தொடர்பான விடயங்களில் விசேட அறிவிப்புக்கள், அவற்றில் முக்கியமானவையாகின்றன.

அதேபோன்று பரிய தரவுகளைப் பயன்படுத்தி மோசடி செய்தலை தடுத்தல், தொலைத்தொடர்பு வலையமைப்பு தொடர்பான சட்டங்களை வலுவாக்குதல், குற்றங்களின் புதிய வகை மீறல்களில் ஈடுபட்டுள்ள உறைந்த நிதிகளை திரும்பப் பெறுவதற்கான பல விதிகளை அமுலாக்குதல் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

சீன அரசாங்கம் பொதுப்பாதுகாப்பு, தகவல் தொடர்பு, நிதி, இணையம் போன்ற முக்கிய துறைகளில் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், சமூக சங்கங்கள் போன்ற முக்கிய துறைகளில் ஒரு பல்வகை ஆராய்ச்சி அமைப்பை உருவாக்கியுள்ளது.

2021ஆம் ஆண்டில், புதிய குற்றவியல் வழிமுறைகள், புதிய சிக்கல்கள், புதிய போக்குகள், புதிய சூழ்நிலைகள் பற்றிய ஆராய்ச்சியை தொடர்ந்து வலுப்படுத்தவும், குற்றங்களைத் தடுப்பதில் எப்போதும் முன்முயற்சி எடுக்கவும் சீன அரசாங்கம் புதிய வகையான குற்றங்கள் பற்றிய ஆய்வுக்கான தேசிய மையத்தையும் அதனுடன் இணைந்து செயற்படுவதற்காக 11 துணை மையங்களையும் நிறுவியது.

### சிறப்புக் குழுக்களின் திறமைகளையும் நிலைமைகளையும் வலுப்படுத்துதல்

சீன அரசாங்கம் தொலைத்தொடர்பு மற்றும் இணையவழி மோசடி குற்றங்கள் குறித்த செயற்பட்டில் நாடு கடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை சிறப்பு வழிகள் மூலம் கட்டுப்படுத்துவதைக் இலக்காகக் கொண்டு செயற்படுகின்றது. அதற்காக சிறப்பு நிறுவன மயப்படுத்தப்பட்ட கட்டமைப்புக்களை நிறுவியுள்ளது.

2021ஆம் ஆண்டில், சீனாவின் குற்றப் புலனாய்வு பொலிஸ் பல்கலைக்கழகம், குற்றவியல் புலனாய்வு மேஜரின் தொலைத்தொடர்பு மற்றும் இணையவழி மோசடி விசாரணைத் தொடங்குவதில் முன்னிலை வகித்தது. அதே ஆண்டு செப்டெம்பரில் இளங்கலை பட்டதாரிகளின் முதல் குழுவைச் சேர்த்தது. இது பொதுமக்களுக்கு மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியது. பாதுகாப்பு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் சிறப்பு மோசடி எதிர்ப்பு திறமைகளை வளர்ப்பதற்கு பாரிய பங்களிப்பை தற்போது வழங்குகின்றன.

### மோடிகளை கட்டுப்படுத்தலும் தீர்வுகளை வலுப்படுத்துதலும்

தொலைத்தொடர்பு மற்றும் இணையவழி மோசடி குற்றங்களுக்கு எதிராக சீன பொலிஸார் கடுமையாக போராடுகின்றார்கள். அண்மைய ஆண்டுகளில், பொதுப்பாதுகாப்பு அமைச்சு தொலைத்தொடர்பு மற்றும் இணையவழி மோசடி குற்றங்களை எதிர்த்து தேசிய பொது பாதுகாப்பு அமைப்புகளின் 'கிளவுட் ஸ்வார்ட்' (Cloud Sword) செயல்பாட்டைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இது குறிப்பிடத்தக்க அடைவுகளைக் கண்டுள்ளதோடு மோசடிகளுக்கான வலுவான தடுப்பையும் உருவாக்கியது.

மோசடியை எதிர்த்துப் போராடுவதில் ஒவ்வொரு நாட்டின் இறையாண்மைக்கு மதிப்பளிக்கும் அடிப்படையில் சீனா சட்ட அமுலாக்கத்தையும் நீதித்துறை ஒத்துழைப்பையும் தீவிரமாக நடத்துகிறது. 20க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிராந்தியங்களுக்கு சீன பொலிஸ் அழைக்கப்பட்டுள்ளது.

சட்டத்தின் வலுவான ஆதரவுடன் நீதித்துறை அதிகாரிகள், சீனப் பொலிஸ ார் சீன மோடிச சந்தேக நபர்கள் மீது நடவடிக்கைகளை முன்னெடுகின்றார்கள். முக்கிய உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் அடையாளம் காணப்படும் பட்சத்தில் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தொலைத்தொடர்பு மற்றும் இணைய வழி மோசடிக் குழுக்களின் முக்கிய உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களைக் கைது செய்து தண்டனை அளிப்பதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும் அவர்களில் பெரும் தீங்கு விளைவிக்கும் குற்றவாளிகளுக்கு எதிராக பொதுப்பாதுகாப்பு அமைச்சின் 'கிளாஸ்-ஏ' ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. குறித்த ஆணைகளுக்கு அமைவாக இதுவரையில் முக்கிய உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### சர்வதேச சட்ட அமுலாக்கம் நீதித்துறை ஒத்துழைப்பு

உலகமயமாக்கல் காலத்தில், எந்த நாடும் தனிமைப்படுத்தப்பட்டிருக்க முடியாது. நாடுகடந்த தொலைத்தொடர்பு மற்றும் இணையவழி மோசடியின் தீவிரமான மற்றும் சிக்கலான சூழ்நிலையில், ஒடுக்குமுறைகளை வலுப்படுத்தவும், கட்டுப்பாட்டைத் தேடவும் மற்றும் ஒத்துழைப்பைத் தொடரவும் நாடுகளின் விருப்பம் மிகவும் வலுவானவை.

2010இல், சீனப் பொலிஸாருக்கும், பிலிப்பைன்ஸ் பொலிஸாருக்கும் இடையிலான முதலாவது சர்வதேச சட்ட அமலாக்க ஒத்துழைப்பு நாடுகடந்த தொலைத்தொடர்பு மற்றும் இணைவழி மோசடி குற்றவியல் குழுவை கட்டுப்படுத்தி அகற்றியது.

அதன்பிறகு, தொலைத்தொடர்பு மற்றும் இணைவழி மோசடிவ விடயத்தில் சீன அரசாங்கம் அதன் சர்வதேச கடமைகளை நிறைவேற்ற உறுதிபூண்டுள்ளது. சர்வதேச சட்ட அமுலாக்க ஒத்துழைப்பை தீவிரமாக முன்னெடுத்துச் செல்கிறது. சீனாவின் அறிவு, சீனாவின் தீர்வுகள், சீனாவின் வலிமையான கட்டமைப்பு தொடர்ச்சியாக பங்களிப்பைச் செய்வதில் முன்னிற்கிறது.

ஆசியா-பசுபிக் பிராந்தியம் மற்றும் ஆப்பிரிக்காவில், தொலைத்தொடர்பு மற்றும் இணையவழி மோசடிக் குற்றங்களை முறியடிப்பதற்கும், வெற்றிகரமான அனுபவத்தைக் பெறுவதற்கும், நல்ல வழிமுறைகளை உருவாக்குவதற்கும், கம்போடியா, பிலிப்பைன்ஸ், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கென்யா போன்றவற்றுடன் சீனா சட்ட அமுலாக்க ஒத்துழைப்பை தொடர்ச்சியாக நடத்தியது.

2016ஆம் ஆண்டு சீன பொலிஸ ாருக்கும் ஸ்பெயின் பொலிஸாருக்கும் இடையே நடத்தப்பட்ட முன்னெடுக்கப்பட்ட 'கிரேட் வோல் 13' என்ற நடவடிக்கை குற்றக் குழுக்களை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியது. இதன்போது 237 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதோடு 225 சந்தேக நபர்கள் சீனாவுக்கு ஒப்படைக் கப்பட்டனர், இது சர்வதேச சட்ட அமுலாக்க ஒத்துழைப்பின் முன்மாதிரியாக உள்ளது.

2018ஆம் ஆண்டில், சீனாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சின் ஊழியர்கள் ஐரோப்பியாவுக்குச் சென்று 'கிரேட் வோல்' குறித்த அனுபவத்தைப் பரிமாறிக் கொள்ளவும், இந்த மாதிரியைப் பற்றி சீனாவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையில் முன்னெடுப்பதற்காக நீண்ட கலந்துரையாடலைச் செய்தனர்.

2022 மார்ச் முதல் ஜூன் வரை இன்டபோல் கட்டமைப்பிற்குள் 76 உறுப்பு நாடுகளின் பொலிஸாருடன் மோசடி எதிர்ப்பு நடவடிக்கையில் சீன பொலிஸார் பங்கேற்றனர். சர்வதேச ரீதியில் 1,770 மோசடி மறைவிடங்களை அடையாளப்படுத்தவும், 2,000 க்கும் மேற்பட்ட சந்தேக நபர்களைக் கைது செய்யவும் உதவியதோடு 50 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான சட்டவிரோத நிதி மோசடி செய்யப்படுவதையும் தடுத்தது.

ஒரு விடயம் எவ்வளவு கடினமானது என்பதை நாம் முதலில் அனுபவிக்காத வரையில் நமக்குத் தெரியாது. தொலைத்தொடர்பு மற்றும் இணையவழிக் மோசடி குற்றங்கள் மீதான ஒடுக்குமுறைகள் சமீபத்திய ஆண்டுகளில் தொடர்ச்சியான முன்னேற்றங்களைக் கண்டுள்ளதோடு முக்கியமான சாதிப்புக்களையும் உருவாக்கியுள்ளன.

# ஜே.வி.பியின் ஆசி பெற்ற அநுரா"வின் தமிழர் விரோத அரசியலை முழு பலத்துடன் தமிழ்த் தேசியம் எதிர்கொள்ளும்

## தமிழ் தேசிய பண்பாட்டு பேரவை தலைவர் பா.கேதீஸ்வரன்

ஜே.வி.பியின் சிந்தனையுடன் அதன் ஆசியுடன் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக பொறுப்பெற்றுக்கொண்டார்.

ஊழல் ஒழிப்பு என்ற இவரின் தடாலடி நடவடிக்கைகளை பார்த்துப் பலரும் முட்டைக்குள் இருந்து வெளிவந்து உலகத்தைப் பார்ப்பது போல் வியந்து பார்த்து புளகாங்கிதம் அடைந்து வருகின்றனர் ஆனால் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தேசிய மக்கள் சக்தி என்ற கட்சியினூடகத் தேர்தல் களம் இறங்கியிருந்தாலும் இவருடைய சிந்தனை ஜே.வி.பி.யின் தமிழர் விரோதப் போக்கில் உடன்பட்டதேயாகும் காரணம் இவர் கடந்த காலத்தில் கடந்து வந்த பாதையும், செயற்பாடுகளும் இதற்கு உதாரணமாகும்.

சில தினங்களுக்கு முன்னர் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிட்டதை நாம் பார்த்தால் அதிகாரப் பகிர்வையோ, பதின்மூன்றையோ வழங்குவதற்கு தயார் இல்லை என்று குறிப்பிட்டிருந்தால் கூட பரவாயில்லை அது சிங்கள பேரினவாதத்தின் சிந்தனை என்று நாம் கருதலாம். ஆனால் ஒரு படி மேலே சென்று அதிகாரப் பகிர்வும், 13ம் தமிழருக்கு தேவை இல்லை என்று குறிப்பிட்டு இருப்பது சிங்கள பேரினவாதத்தின் உச்சகட்ட இனவாதம் என்றே நாம் குறிப்பிட வேண்டும். இது நடந்தது அநுரகுமார திசாநாயக்கவின் ஆட்சியில் தான் இந்த விடயத்தில் அநுரவின் மௌனம் அவரின் ஜே.வி.பி சிந்தனைக்கு சான்றாகும்.

ஆனால் சிங்கள பேரினவாதத்தின் அடக்குமுறைகளையும், அரசியலையும் எதிர்கொண்ட எம் மக்களுக்கு ஜே.வி.பி யின் செயலாளர் ரில்வின் சில்வாவின் வன்மத்தையும், அநுரவின் போலி இடதுசாரி அரசியலையும் எதிர் கொள்வதில் எந்தச் சிரமமும் இல்லை எம் மக்கள் எல்லாவற்றையும் சந்தித்தவர்கள் அந்த வகையில் இந்த ஜே.வி.பி ஆட்சியினை என்றுமே வீழ்ந்து விடாத தமிழ் தேசியம் முழுமூச்சுடன் நிமிர்ந்து நின்று எதிர்கொள்ளும் என தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தலைவர் பா.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

### அரசியலில்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலானவர்கள் பொது வேட்பாளருக்கு வாக்களிக்கும் பொழுது தமிழ் வாக்கு தமிழருக்கு என்றுதான் சிந்தித்தார்கள். மாறாக தேர்தலை ஒரு தேர்தலாக கையாளாத களம் அது என்பது பெரும்பாலான வாக்காளர்களுக்கு விளங்கியிருக்கவில்லை. 50 நாட்களுக்குள் அந்த விளக்கத்தைக் கொடுக்கக்கூடிய சக்தி தமிழ் மக்கள் பொதுச்சபைக்கும் பொதுக் கட்டமைப்புக்கும் இருக்கவில்லை. எனவே வாக்காளர் மனோநிலை என்பது தொடர்ந்து தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டும்கட்சிகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு காணப்பட்டது.

அதற்குக் காரணம் கட்சிகள்தான். மக்கள் ஒரு தலைமைத்துவ வெற்றிடத்தை உணர்கிறார்கள். ஏதாவது ஒரு கூட்டு அல்லது யாராவது தலைவர்கள் வந்து தங்களுக்கு ஒரு புதிய வழியைக் காட்ட மாட்டார்களா என்று ஏக்கத்தோடு எதிர்பார்த்திருக்கிறார்கள்.அதனால்தான் கலகக்காரனாக மேலெழுந்த ஒரு மருத்துவரை ஒருபகுதி மக்கள் ஆர்வத் தோடு பார்த்தார்கள்.அதனால்தான் ஜேவிபியின் எழுச்சியை ஒருபகுதி மக்கள் ஆர்வத்தோடு பார்க்கிறார்கள். அதனால் தான் தமிழ்த்தேசியப் பொதுக்கட்டமைப்பும் தமிழ்மக்கள் பொதுச்சபையும் தொடர்ந்து தேர்தல்களில் ஈடுபட வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

மக்களுடைய அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியாமல் போனமைக்கு மக்கள் அமைப்பு மன்னிப்பு கேட்டது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு ஊடகச் சந்திப்பில் மக்கள் அமைப்பின் பிரதிநிதிகள் அது தொடர்பாக விளக்கம் அளித்தார்கள்.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டதுபோல அவர்கள் மக்களுக்கு உண்மையைக் கூறினார்கள்.பொது வாழ்வில் மக்களுக்கு உண்மையை கூறுவது மகிமையானது. அதற்கு ஒரு துணிச்சல் வேண்டும். அதற்கு ஒரு வாழ்க்கை முறை வேண்டும். பொது வாழ்வில் ஈடுபடும் பெரும்பாலான பிரமுகர்கள் மக்களுக்குப் பொறுப்பு கூறுவதில்லை. தனது செயல்களுக்குப் பொறுப்புக்கூறும் துணிச்சல் மக்கள் அமைப்பிடம் உண்டு என்பதனால் அது நாடாளுமன்றத் தேர்தலைக் கையாளாமல் விட்டதற்கு மன்னிப்புக் கேட்டது.

தேர்தலைக் கையாளாமல் விட்டதற்கு அரசறிவியல் விளக்கம் உண்டு. அதே சமயம் சங்குக்கு வாக்களித்த மக்களின் கூட்டுணர்வு வேறாக உள்ளது. மக்கள் மீண்டும் மீண்டும் கட்சிகளை ஒருங்கிணைத்து வாக்குகள் சிதறுவதைத் தடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.அந்த எதிர்பார்ப்பை தொடர்ச்சியாக நிறைவேற்ற முடியாமைக்கு மக்கள் அமைப்பின் பிரதிநிதிகள் மன்னிப்பு கேட்டார்கள்.

மக்களைச் சிதறடித்தது கட்சிகள்தான். அதற்கு மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியதும் கட்சிகள்தான். மக்களை ஆகக்குறைந்தபட்சம் ஒன்றுதிரட்டிய மக்கள்அமைப்பு அதைத்தொடர்ந்து எல்லாத் தேர்தல்களிலும் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கும் வாக்காளர்களின் கூட்டுஉணர்வை மதித்து பொறுப்பு கூறியது. அதை கட்சிகள் பின்பற்றுமா? சுயேட்சைகள் பின்பற்றுமா?

கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக தமது மக்களுக்கு உண்மையை கூறாதவர்கள், பொய்யான வாக்குறுதிகளை வழங்கியவர்கள்,தாங்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறிய வர்கள் அனைவரும் தமிழ்மக்க ளுக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

பிரதான அரசியல்வாதிகளின் அணிகலன்களாக காணப்படும் இரண்டாம் மூன்றாம் நிலை அரசியல்வாதிகள் அநேகர் மீது ஊருக்குள் குற்றச்சாட்டுகள் உண்டு.பாலியல் குற்றச்சாட்டுக்கள்,ரகசிய டீல்கள் போன்ற பல குற்றச்சாட்டுக்கள் உண்டு.தமது அணிகலன்களாக காணப்படும் இரண்டாம் மூன்றாம் நிலை முக்கியஸ்தர்கள் தொடர்பிலும் தமிழ் அரசியல்வாதிகள் மக்களுக்கு பொறுப்பு கூற வேண்டும்."அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா" என்பது தமிழ் படத்தில் வரும் கொமெடி வாக்கியமாக இருக்கலாம். ஆனால் தேசத்தை நிர்மாணிக்கும் அரசியலில் அது பகிடி அல்ல.பொறுப்புக்கூற வேண்டிய விடயம்.தமிழ் அரசியல்வாதிகள் பொறுப்புக் கூறுவார்களா?

### பொது...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமூகத்தில் பாலியல் சீண்டல்கள் என்பது ஒரு சமூகப் பிரச்சனையாகவும், பெண்களின் அங்கிகாரம் மற்றும் அடையாளத்தைப் போற்றும் நெறிமுறைகளுக்கு எதிரானதாகவும் பார்க்கப்பட வேண்டும்.

பாலியல் ரீதியான வன்முறைகளை ஒழிப்பதற்கான முதலாவது மாற்றம் என்பது மனப்பான்மையிலிருந்து உருவாக வேண்டும். ஆண்களையும் பெண்களையும் சமமாக மதிக்கப்படும் சமூகப் பண்பாடு வளர்க்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு பெண் பிள்ளைகளையும் தங்கள் வீட்டு அக்கா தங்கைகளாகப் பார்க்க வேண்டும் என்று, குழந்தைப் பருவத்தில் இருந்தே ஆண் பிள்ளைகளுக்கு சொல்லி வளர்க்க வேண்டும். ஒருவன் பாலியல் ரீதியான சீண்டல்களைச் செய்யும் போது அங்கே இருக்கும் மற்றொருவன் அதற்கு எதிராக தன் குரலைக் கொடுத்துத் தண்டிக்கும் அளவிற்கு மனப்பான்மையில் மாற்றம் ஏற்பட வேண்டும். சமூகத்தில் விழிப்புணர்வு இயக்கங்கள் பெண்களுக்கு எதிரான பாலியல் சீண்டல்களுக்கான தீர்வுகளை உருவாக் குவது முக்கியமாகும். இது, பெண்கள் மற்றும் ஆண்களுக் கிடையே நல்ல உறவை உருவாக்கி, பழக்க வழக்கங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதாக அமையும். பாடசாலைகள், கல்லூரிகள், சமூக அமைப்புகள் இவற்றின் மூலம் பெண்களின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்துவது பெண்களுக்கு எதிரான வன்முறைகளைச் சற்றேனும் குறைப்பதற்கு உதவியாய் அமையும். நாட்டின் அரசியல் சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது போலவே பொது போக்குவரத்தில் பயணிக்கும் ஒவ்வோர் பெண்களுக்கும் எதிராக சில நேரங்களில் நடக்கும் பாலியல் ரீதியான சீண்டல்களுக்கு இனி வரும் காலங்களிலாவது இறுக்கமான சட்ட ஏற்பாடு கொண்டு வரப்படுமா என்பதே நம் எதிர்பார்ப்பாக உள்ளது.






**திருச்செல்வம் ஜனனி**
ஊடகக்கற்கைகள் துறை
மூன்றாம் வருடமாணவி
யாழ். பல்கலைக்கழகம்.

# போதைப் பாவனையை தடுக்க வேண்டும்.

இன்றைய ஒட்டுமொத்த மக்கள் சமுதாயத்திற்கும் பிடித்திருக்கின்ற நோய் தான் போதைப்பொருட்களின் பயன்பாடு. இது மக்களின் ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கின்ற ஒட்டுண்ணி. உலகளாவிய ரீதியில் 15-64 வயதுக்கிடைப் பட்ட 243 மில்லியன் மக்கள் போதைக்கு அடிமையாகி வருகின்றனர். இவர்களுள் 80% ஆண்களும் 20% பெண்களும் அடங்குவர். கடந்த மூன்றாண்டு காலமாக 6 இலட்சம் பேர் போதைவஸ்து பாவனை காரணமாக உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை வெளியிட்டுள்ளது. எமது நாட்டை பொறுத்தவரையில் மதுசாரம் புகைப்பொருள் மற்றும் ஏனைய போதைப் பொருட்கள் பாவனையினால் தினமும் சுமார் 100 மரணங்கள் ஏற்படுகின்றன என போதைப் பொருள் கட்டுப்பாட்டு தொடர்பாக மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் கூறியுள்ளது. மேலும் எமது நாட்டை பொறுத்தவரையில் தனி நபர்கள் புகைத்தல் மற்றும் மதுபாவனைக்காக நாள் ஒன்றுக்கு 120 கோடிக்கு மேலாக செலவிடுகின்றார்கள் இவ்வாறே சென்றால் நாட்டை நாமே பாதாளத்தில் தள்ளுவதை போலாகும்.



**போதைப்பழக்கத்தினால் மூளைக்குச் செல்லும் நரம்புகள் பாதித்து நினைவாற்றலை குறைக்கச் செக்கின்றது. இதன் காரணமாக மனதளவில் தன்னம்பிக்கை இழக்கிறார்கள். உடல்சோர்வடைதல், குற்ற உணர்ச்சி, தனிமையை நாடுவது போன்ற அவல நிலைக்கு உள்ளாகின்றார்கள்.**

அந்த வகையில் பாடசாலை மாணவர்கள் இடத்தே தற்பொழுது போதை பொருட்களின் பாவனையானது மிக வேகமாக பரவி வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. மாணவர்களிடையே போதைப்பொருள் பாவனை அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக அமைபவை இவர்கள் இப் பழக்கவழக்கங்களை சினிமாவில் மற்றும் நண்பர்கள், அறிமுகமில்லாத தம்மை விட வயதிலும் கூடிய நபர்களிடம் இதனை பெரும்பாலும் கற்றுக் கொள்கின்றார்கள் உதாரணமாக காதல் தோல்வியில் ஏமாற்றம் அடைதல் ஒரு சில பிரச்சனைகளுக்கு வலி தீர்க்கும் நிவாரணி என்று தோழர்கள் போதைப்பொருட்களை சிபாரிசு செய்கின்றார்கள் அதிகமான திரைப்படங்களில் கூட இதைத்தான் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

பாடசாலையில் பாடவேளைகளிலும் கூட வகுப்பில் வைத்து மாணவர்கள் போதைப்பொருட்களை உள்ளெடுத்து விட்டே வருகின்றார்கள் அவ்வாறு போதைப்பொருட்களை உட்கொண்ட மாணவர்களை கேள்வி கேட்பதற்கு ஆசிரியர்களுக்கு தயக்கம் ஏனென்றால் அவர்கள் ஏதாவது செய்து விடுவார்கள் என்ற பயம் அவர்களிடத்தில் உண்டாகுகின்றது.

தொடர்ச்சியாக பள்ளிபருவ வயதில் பழகிக் கொள்ளும் இத்தகைய போதைப்பழக்கங்கள் மெல்ல மெல்ல இவர்களை போதைக்கு அடிமையாக்கி விடுகிறது. போதைப்பழக்கத்தினால் முதலில் பாதிப்படைவது மனிதனின் நரம்பு மண்டலம். மூளைக்குச் செல்லும் நரம்புகளைப் பாதித்து நினைவாற்றலை குறைக்கச் செக்கின்றது. இதன் காரணமாக சீரான இதயத்துடிப்பு பாதிக்கப்பட்டு இரத்த அழுத்தம் அதிகரிக்கின்றது. உடலில் ஏற்படும் இத்தகைய மாற்றங்களினால் இதை உட்கொண்டவர்கள் மனதளவில் தன்னம்பிக்கை இழக்கிறார்கள். உடல்சோர்வடைதல், குற்ற உணர்ச்சி, தனிமையை நாடுவது போன்ற அவல நிலைக்கு உள்ளாகின்றார்கள். போதைப் பொருட்களினால் உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்படும் பாதிப்புகள், இவ்வாறாக போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களின் குடும்ப வாழ்க்கை, சமூக அந்தஸ்து எல்லாவற்றிலும் பாதிப்புகள் ஏற்பட்டு விடுகின்றது. இதன் மூலம் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்ட வர்களாக போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுவோர் புறந்தள்ளப்படுவார்.

இவ்வாறாக போதைப்பொருளைக் கட்டுப்படுத்தல் தொடர்பாக Police Constable K.M Sowjath அதிகாரியை நேர்காணல் செய்தபோது...

போதைப்பொருள் இன்றைய காலத்தில் சிறியவர், பெரியவர், படித்தவர், பாமரர் என்ற வித்தியாசம் இன்றி அனைத்து தரப்பினர்களுக்கு மத்தியிலும் ஊடுருவி தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கிறது. இதன் மூலம் மனிதன் சமூக பொருளாதார பிரச்சனைகளுக்கு முகம் கொடுப்பதுடன் உறவினர்கள் நண்பர்கள் மற்றும் சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுகிறார். இன்று எமது நாட்டினை பொறுத்தவரையில் சில தரப்பினர்களுக்கு செல்வந்தர்களாக மாறுவதற்கான உபாயமாக போதைவஸ்து விற்பனையை அடையாளப்படுத்தும் அளவுக்கு நிலைமை மாறியிருக்கின்றது. இவ் பொருள் பாவனையினால் நாளுக்கு நாள் பல குடும்பங்கள் சீரழிந்து கொண்டு செல்கின்றது. இதற்கான பிரதான காரணம் போதைப்பொருள் பொருள் சம்பந்தமான சரியான விழிப்புணர்வு இன்மையாகும். போதைப்பொருளினைக் கட்டுப்படுத்துவதற்கு வெறுமனே அரசாங்கத்தினாலோ பொலிஸாரினாலோ மட்டும் முடியாது. ஒவ்வொரு தனி நபரனினூடகவும் பொறுப்புதாரிகளான தாய் தந்தையர்கள், ஆசிரியர்கள், மதத் தலைவர்கள் நிறுவனத் தலைவர்கள் என்று பலதரப்பட்டவர்களினாலும் பாடசாலை மாணவர்கள, இளைஞர்கள், ஊழியர்கள் என்று அனைவருக்கும் போதைப் பொருள் பாவனையின் வீரியத்தினை எடுத்துக் கூறி விழிப்புணர் ஊட்டப்பட வேண்டும் இவ்வாறு விழிப்புணர்வு செய்யப்படும் போது இந்நாட்டினை



**K.M Sowjath**
**Police Constable**

போதை பொருள் பாவனையற்ற தூய நாடாக மாற்ற முடியும் ஆகவே தற்கால சமூகத்தில் போதைப்பொருள் விழிப்புணர்வு அவசியமாகும்.

போதைப்பொருள் பாவனை தடுப்பதற்கு இளைஞர்களின் பங்களிப்பு இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது. போதைப்பொருள் பாவனை தடுப்பில் இளைஞர்கள் தங்களை அர்ப்பணிப்பது காலத்தின் கட்டாயமாக உள்ளது. ஏனெனில் இன்றைய சிறுவர்கள் தான் நாளைய தலைவர்கள் இவர்களைத்தான் சிறார்கள் போலசெய்கிறார்கள் அதனால் இளைஞர்கள் முதலில் தாங்கள் போதைப்பொருள் பாவனை தொடர்பான எந்த விடயத்திலும் ஈடுபட மாட்டோம் என திடசங்கற்பம் பூண வேண்டும். போதைப்பொருள் பாவனை என்றால் என்ன? போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் ஆபத்துக்கள் எவை? இவற்றையெல்லாம் ஏனைய இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கு ஆலோசனையாக கூறுதல் வேண்டும். சமூக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த பாடசாலைகள், கல்வி நிறுவனங்களுக்குச் சென்று வழிகாட்டல் கருத்தரங்குகள், ஆலோசனைகள்இ தெருநாடகங்கள் 'போதைப்பொருள் சார்ந்த தீங்குகள்' எனும் தலைப்பில் மேடை நாடகங்களை நடத்துதல், சுவரொட்டிகளை ஒட்டுதல், போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் தீங்கை விபரித்து துண்டுப்பிரசுரம் விநியோகித்தல் போன்ற சமூக சேவைகளில் இளைஞர்கள் தங்களை அர்ப்பணிப்பதன் மூலம் தமது சமூகத்திடையே போதைப்பொருள் பாவனையை அகற்றி விட முடியும் மற்றும் போதைப்பொருளுக்கு எதிரான சட்டதிட்டங்களை கடுமையாக்குவதும் போதைப்பொருட்களை ஒழிப்பதற்கான வழியாகும்.

இன்றைய இளம் சமுதாயத்தினர் இணையதளத்தை தங்கள் உலகமாகக் கருதி வாழ்வதால் அடிக்கடி அவர்கள் பார்க்கும் இணைய தளங்கள் குறித்து பெற்றோர் விழிப்புடன் இருக்க வேண்டும் என்னதான் போதைப்பொருட்ப்பாவனையை குறைக்க இலங்கை பொலிஸ் திணைக்களம், பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப்பிரிவு, மது வரித்திணைக்களம், சிறைச்சாலைகள், சுங்க வரித்திணைக்களங்கள், அரச திணைக்களங்கள் நடவடிக்கைகள் எடுத்தாலும் போதைப்பொருள் பாவனை நாடளாவிய மட்டத்தில் மோசமாக அதிகரித்து வரும் நிலையில், இது சார் விழிப்புணர் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இருக்கவேண்டும் போதைப்பொருள் பாவனை சிறுபராயத்திலியே ஏற்பட்டு விடுவதால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டும். குறிப்பாக, அவர்கள் தனிமையை விரும்பினால் அடிக்கடி பணம் கேட்டால், படிப்பில் நாட்டம் குறைந்தால் நடத்தைகளில் மாற்றம் தெரிந்தால் வழக்கத்திற்கு மாறாக நடவடிக்கை தென்படுமாயின், அவர்களைச்சுற்று கூர்ந்து அவதானிப்பது சிறந்தது

பெற்றோர் தமது பிள்ளைகள் போதைப்பழக்கத்திற்கு அடிமையாகி விட்டார்கள் என அறிந்து கொண்டால் அவர்களை முற்றிலும் ஒதுக்கி விடாமல் அவர்களை அரவணைத்து, போதைப்பழக்கத்தால் ஏற்படும் பின்விளைவுகளை எடுத்து கூறி அவர்களை அப்பழக்கத்திலிருந்து சிறிது சிறிதாக வெளிக்கொண்டு வர வேண்டும். மேலும் மறுவாழ்வு நிலையங்களூடாக முறையான சிகிச்சை எடுத்துக் கொள்வதன் மூலமும் போதையிலிருந்து மீண்டுவர முடியும்.

இலங்கையில் நூற்றுக்கு 95 சதவீதமான விதமான குற்றங்கள் போதை பொருளினாலும் போதைப் பொருள் உபயோகித்தவர்களினாலும் நடைபெறுகிறது. இதைமட்டுப்படுத்தலாமே தவிர பொலிஸாரால் முற்றாக ஒழிக்க முடியாது. இதனை முற்றாக அழிக்க வேண்டும் என்றால் ஒவ்வொரு மாற்றம் என்பது ஒவ்வொரு தனி நபர்களிடமும் ஏற்படவேண்டும். போதைப்பொருள் பொருள் உபயோகிப்பதிலிருந்து இருந்தும் போதைப்பொருள் வியாபாரத்திலிருந்து ஒவ்வொரு தனிநபரும் அதிலிருந்து விலக வேண்டும். மாற்றம் என்பது ஒவ்வொரு தனிநபரிடமிருந்து ஆரம்பிக்கப்படும் பட்சத்திலேயே சிறீலங்காவை ஒரு போதைப்பொருள் இல்லாத நாடாக மாற்ற வேண்டும் அதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் முயற்சியும் தேவை.

# தமிழ்த் தேசியத்தை விழுங்கப்போகும் ஜே.வி.பி



**என்.கண்ணன்**

வடக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு 13ஆவது திருத்தச் சட்டமும் அதிகாரப்பகிர்வும் அவசியம் இல்லை. அவர்களுக்கு தேவைப்படுவது, விவசாயத்திற்கான தண்ணீர், சந்தைப்படுத்தல் வாய்ப்பு, கல்வி மற்றும் வைத்திய வசதிகள் தான் என்று, ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளரான ரில்வின் சில்வா கூறியிருக்கிறார்.

தேசிய மக்கள் சக்தி என்ற போர்வையில் இப்போது செயற்படுகின்ற ஜே.வி.பி.யின், நீண்டகால பொதுச் செயலாளர் இவர்.

ஜே.வி.பி.யின் மூலக் கொள்கைகளை இன்னமும் பற்றிப் பிடித்திருக்கின்ற முக்கியமான உறுப்பினர்களில் ரில்வின் சில்வாவும் ஒருவர்.



அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றாலும், ஜே.வி.பி.யின் ஒரு கருநிழல் அவரைப் பின்தொடர்ந்து கொண்டு தான் இருக்கும் என்று முன்னரே எதிர்பார்க்கப்பட்டது.

அவ்வாறு பின் தொடரக் கூடிய நிழல் அரசியல்வாதிகளாக, ரில்வின் சில்வா, லால்காந்த போன்றவர்கள் எதிர்பார்க்கப்பட்டார்கள்.

ரோஹண விஜேவீரவுக்கு பின்னரான காலகட்டத்தில், சோமவன்ச அமரசிங்கவின் தலைமையில், மீளமைக்கப்பட்ட ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளராக பொறுப்பேற்றவர் தான் ரில்வின் சில்வா. இன்று வரை அவர் அந்த பதவியை விட்டு விலகத் தயாராக இல்லை.

அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்திருந்த அவர் மாற்றங்களுக்கு வழிவிட்டு, இளையவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைப்பதற்காக பொதுச் செயலாளர் பதவியை வேறு ஒருவருக்கு வழங்க விரும்புவதாக கூறியிருந்தார்.

ஆனால், அதனை அவர் உடனடியாக செய்யத் தயாராக இல்லை. ஏனென்றால் அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கத்துக்கு கடிவாளம் போடும் வேலை அவருக்கு இருக்கிறது. இந்தியாவின் பா.ஜ.க. அரசாங்கத்திற்குப் பின்னால் ஆர்.எஸ்.எஸ். எப்படியிருக்கிறதோ அதேபோலத் தான், இதுவும். தமிழ் மக்களுக்கு பல பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார் ரில்வின் சில்வா.

மொழி பிரச்சினை, காணிப்பிரச்சினை, பொருளாதார பிரச்சினை, கல்வி பிரச்சினை, மருத்துவப் பிரச்சினை இவற்றைத் தான் அவர் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

தமிழ் மக்களால் தமிழ் மொழியில் நிர்வாக தொடர்புகளை மேற்கொள்ள முடியவில்லை என்றும், அதனால் அவர்கள் சிரமப்படுகிறார்கள் என்றும் கூறியிருக்கிறார். இது உண்மையானது. எல்லாவற்றிற்கும் அவர்கள் கொழும்பை தேடி வர வேண்டி இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார், அதுவும் சரியானது.

தெற்கில் இருந்து வடக்கே செல்லும் வீதி அழகாக இருக்கிறது வீதியோரத்தில் கடைகள் அழகாக இருக்கின்றன, ஆனால் அவற்றுக்கு அப்பால் சென்றால் மக்கள் பெரும் துன்பப்படுகிறார்கள், வீடுகள் இன்றி இருக்கிறார்கள். நெருக்கடிகளை சந்திக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார் . இதுவும் சரியானது.

மருத்துவ வசதிகளும், கல்விக்கான வாய்ப்புகளும் அவர்களுக்கு குறைவாக இருக்கிறது என்ற அவரது கருத்தும் ஏற்றுக் கொள்ளக் கூடியது. இந்தப் பிரச்சினைகளை மாத்திரம் தீர்த்து விட்டால் போதும், தமிழ் மக்களுக்கு அதிகார பகிர்வும் 13ஆவது திருத்தச் சட்டமும் அவசியமில்லை என்றும் என்று கூறி இருக்கிறார்.

இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தமிழ் அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், அதற்கு பதிலாக அவர்கள் 13ஆவது திருத்தச் சட்டம், அதிகாரப்பகிர்வு என்று தங்களின் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதிலேயே ஈடுபட்டிருந்தார்கள் என்றும் குற்றம்சாட்டியிருக்கிறார்.

இந்த இடத்தில் தான், ரில்வின் சில்வாவின் உண்மையான பழைய முகம் வெளிப்பட்டிருக்கிறது. அவரது அறியாமையையும் புரிந்து கொள்ள முடிகிறது.

ரில்வின் சில்வா குறிப்பிட்ட அத்தனை பிரச்சினைகளும் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்களுக்கு இருக்கிறது என்பது உண்மை. இந்த பிரச்சினைகளில் பல தெற்கில் உள்ள மக்களுக்கும் இருக்கிறது. அவர்களும் வறுமையில் இருக்கிறார்கள். வைத்திய வசதி இல்லாமல் இருக்கிறார்கள்.

நிர்வாகத் தேவைகளுக்காக கொழும்பு செல்ல வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். கல்விக்காக தொலைதூரத்திற்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள்.

ஆனால், இதுவரை ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்கள் எவரும் சிங்கள மக்களின் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்கவில்லை.

வடக்கில் உள்ள மக்களின் இந்த பிரச்சினைகளை, தமிழ் அரசியல்வாதிகள் தீர்த்து வைக்கவில்லை என்று கூறும் ரில்வின் சில்வா, தெற்கில் உள்ள இதே பிரச்சினையை ஏன் ஜே.வி.பி. தீர்த்து வைக்கவில்லை என்ற கேள்விக்கும் பதிலளிக்க வேண்டும்.

அவர்களும் அரசியல்வாதிகளாக இருக்கிறார்கள், அரசாங்கத்திலும் அங்கம் வகித்திருக்கிறார்கள். அரசாங்கக் கட்சியுடன் கூட்டணியும் வைத்திருந்திருக்கிறார்கள். அப்படி இருந்தால் ஜே.வி.பி.ஏன் தெற்கில் உள்ள சிங்கள மக்களுக்கு இந்த வசதிகளை பெற்றுக் கொடுக்கத் தவறியது?

இந்த குறைபாடுகளை சுட்டிக்காட்டி ஏன் அதிகாரத்தை கைப்பற்ற முனைந்தது? இது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்கான முயற்சி இல்லையா? என அடுக்கடுக்காக கேள்விகளை எழுப்பலாம்.

தமிழ் அரசியல்வாதிகளை குற்றம்சாட்டும் ரில்வின் சில்வா, அவர்களை நோக்கி விரலை நீட்டும் போது, தங்களை நோக்கி ஏனைய மூன்று விரல்களும் நீளும் என்பதை மறந்து விட்டார்.

தமது மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காகத் தான் ஜே.வி.பி. ஆயுதப் போராட்டங்களை முன்னெடுத்தது. ஆட்சியை கவிழ்த்து அதிகாரத்தை கைப்பற்ற இரண்டு முறை முயற்சித்தது.அது அதிகார மோகம் இல்லையா?

ஜே.வி.பி.க்கு உள்ள அதிகாரமோகம் தமிழ் அரசியல்வாதிகளுக்கு இருப்பது மாத்திரம் எவ்வாறு தவறானதாகும்.?

தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய வகையில் - அதிகாரத்தில் இருந்தவர்கள் அல்ல. ஒரு சிலர் அவ்வாறு இருந்திருக்கலாம்.

பெரும்பாலான தமிழ் அரசியல்வாதிகள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களுடன் இருந்த கூட அமர்ந்திருந்த ஜே.வி.பி.யினருக்கு அது தெரியும்.

எதிர்க்கட்சி வரிசையில் இருந்தும் மக்களின் பிரச்சினையை தீர்த்து வைக்க முடியும் என்றால், ஜே.வி.பி.யும் அவ்வாறே செய்திருக்கலாம். தெற்கில் உள்ள மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைத்திருக்கலாம்.

அதைவிட, இனவாதம் இல்லாத கட்சி என்று கூறும் ஜே.வி.பி. வடக்கில் உள்ள மக்களின் பிரச்சினையை தீர்க்க என்ன செய்திருக்கிறது?

எதிர்க்கட்சி வரிசையில் இருந்து கொண்டு மக்களின் பிரச்சினையை தீர்க்க முடியாது என்பதால் தான், ஜே.வி.பி. அதிகாரத்தை கைப்பற்றியது.

அதுபோன்று தான் தமிழ் மக்களும் தங்களுக்கு அதிகாரத்தை கைப்பற்ற முனைகிறார்கள். இது ஒன்றும் ஆச்சரியமான விடயம் அல்ல.

இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு தமிழ் அரசியல்வாதிகளுக்கு அதிகாரம் தேவை, அதிகாரப்பகிர்வு தேவை. அதிகாரப்பகிர்வு இல்லாமல் அவர்களால் இந்த பிரச்சினையை தீர்க்க முடியாது.

ஜேவிபியை போன்று தமிழ் அரசியல்வாதிகளால் நாட்டின் அதிகாரத்தை கைப்பற்ற முடியாது. அதற்கு இந்த நாட்டின் இன அரசியல் இடமளிக்காது.

அப்படியானால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொள்வதற்கு, பிராந்திய மட்டத்தில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். அந்த அதிகாரப்பகிர்வின் மூலம் கிடைக்கும் அதிகாரங்களைக் கொண்டு தான், தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியும்.

அதற்காகத்தான், அதிகாரப்பகிர்வையும் 13ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கத்தையும் அரசியல்வாதிகள் முன்வைத்து வந்திருக்கிறார்கள். இது ஒன்றும் ஜே.வி.பி.க்கு தெரியாத விடயம் அல்ல.

ஆனாலும், அவர்கள் இப்படி மக்களை திசை திருப்ப முனைகிறார்கள். குறிப்பாக தமிழ் மக்களை அவர்கள் இலக்கு வைக்கிறார்கள். இந்தமுறை பாராளுமன்றத் தேர்தலின் மூலம் தேசிய மக்கள் சக்தியை வடக்கில் காலூன்ற வைக்க முயற்சிக்கிறார்கள்.

அந்த முயற்சியில் அவர்கள் வெற்றி பெற வேண்டுமானால் தமிழ் அரசியல்வாதிகள் தோல்வியடைய வேண்டும். தமிழ் தேசிய அரசியல் இல்லாமல் ஒழிக்கப்பட வேண்டும்.

அதனை செய்தால் தான் அவர்களுக்கு வாக்குகள் கிடைக்கும் ஆசனங்கள் கிடைக்கும். அதற்காகத்தான், தமிழ் அரசியல்வாதிகளின் மீது பழியை போட்டு, தமிழ் மக்கள் அதிகாரப்பகிர்வை விரும்பவில்லை என்று கதை கூறியிருக்கிறார் ரில்வின் சில்வா.

தமிழ் மக்களுக்கு பொருளாதார பிரச்சினை இருக்கிறது.கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல பிரச்சினைகள் இருக்கின்றன, காணிப் பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் தீர்க்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது.

அதனை இதுவரை ஆட்சியில் இருந்த எந்த அரசாங்கமும் செய்ததில்லை. அதனால் தான், தமிழ் மக்கள் தங்களுக்கு தன்னாட்சி அதிகாரம் தேவை என்று கேட்கிறார்கள் .

ஆனால் ஜேவிபி இதனை எதிர்க்கிறது. 'வைக்கோல் பட்டடையைக் காவல் காக்கும் நாய்' போல, தானும் தின்னத் தயாராக இல்லை. மற்றவர்களையும் தின்ன விடப் போவதும் இல்லை. ஜே.வி.பி.யின் இந்த அரசியலை புரிந்து கொள்ளாவிட்டால், அது கொஞ்சம் கொஞ்சமாக தமிழ்த் தேசிய அரசியலை தின்று தீர்த்து விடும்.

# பாராளுமன்றத் தேர்தல் 2024

## யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்



தேசத்தின் மீட்புக்காய்
தேசியத்
தலைவர் வழி நின்ற
போராளிகளுக்கான
அரசியல்
அங்கீகாரம்!

போராளி
**சி.வேந்தன்**

1 2 3 4 5 6 7 8 9

தாயகம் தேசியம் சுயநிர்ணயம்
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி



# ஏற்றமிகு எதிர்காலம் இளைஞர் கைகளில்..

4



**ஜெ.ஜனார்த்தனன்**
LL.B, Reading For AAL
பிரசாரச் செயலாளர் - தமிழ்த் தேசியக் கட்சி
ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி


# பாராளுமன்ற தேர்தல் - 2024

## சுயேட்சை 21

பேரன்புக்குரிய பாசமிகு உறவுகளே!

இலங்கையின் 17வது பாராளுமன்றத் தேர்தலை சந்திக்கப் போகும் எம் மக்களே! கடந்த 16 தடவைகள் எமக்கானவர்கள் என்று நாம் நினைத்து வாக்களித்தவர்கள் எமது அரசியல், பொருளாதார நம்பிக்கையினை பொய்யாக்கியுள்ளனர் அதன் தாக்கம் சிங்களத்தில் ஒரு அரசியல் கதாநாயகனை தேடும் அளவிற்கு எம் மக்களை கொண்டு வந்து நிறுத்தியுள்ளது. எமது மக்கள் தமிழ் அரசியல் கட்சிகளையும், அரசியல்வாதிகளையும் அருவருக்கத் தொடங்கியுள்ளார்கள் இதன் விளைவாக மக்களோடு மக்களாக இருந்த நாம் இன்று சுயேட்சையாக களமிறங்கியுள்ளோம்.

உண்மையில் மக்களின் ஆணை எமக்கு கிடைத்தால் ஒரு பாராளுமன்றத்தில் எதை செய்ய முடியும் என்பதை பின்வருமாறு பட்டியலிட்டுள்ளோம்.

*“எதை செய்ய முடியுமோ அதைத்தான் செய்ய முடியும் முடியாத கட்டு கதைகள் மூலம் எமது மக்களின் கண்களை கட்ட நாம் விரும்பவில்லை.’*

## செயற்பாட்டுடன் கூடிய தேர்தல் அறிக்கை 2024

**பாராளுமன்றத் தேர்தலில் எமக்கு “மக்கள் ஆணை” கிடைத்தால் எம்மால் இவற்றைச் செய்ய முடியும்,**

1. சர்வதேச தரம், தேவைகளுக்கு ஏற்ற கல்வி முறை.
2. உயர் கல்விக்கான கடன் உதவியினை அரசு மானியத்துடன் கோரல்.
3. வறுமைக் கோட்டிற்க்கு கீழ் உள்ளவர்களுக்கு இலவச மருத்துவக் காப்புறுதி கோரிக்கை முன் வைக்கப்படும்.
4. நவீன தொழில் முனைவோருக்கான திட்டங்களுடன் அதற்கான நிதியை பெற்றுக்கொடுத்தல்.
5. தாயகம் திரும்புவோர் மற்றும் திரும்பியோருக்கான சிவில் உரிமைகள், வீடு, நிலம், தொழில், மற்றும் பாதுகாப்பு.
6. புலம்பெயர் தமிழர்கள் தாயகத்தில் செய்யும் முதலீடுகளுக்கான பாதுகாப்பு மற்றும் அரசின் அனுமதி.
7. தாயகத் தமிழர்கள், புலம்பெயர் தமிழர்கள் இணைந்த தொழில் அபிவிருத்தி மேம்பாடு, முதலீடு.
8. சாரதியத்தை வாழ்வியல் அடிப்படைத் தொழிலாகக் கொண்டவர்கள் மற்றும் தெருவோர சிறுவியாபாரிகளின் பாதுகாப்பிற்கான சட்ட உதவி, கடனுதவி அரசிடம் கோரப்படும்.
9. கடற்றொழிலாளர்கள் வாழ்வாதாரம் தொடர்பாக டீசல், மண்ணெண் ணைக்கான மானியம் அரசிடம் கோரப்படும் மேலும் எல்லை தாண்டி இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்து போதைபொருட்களை நாட்டிற்குள் கொண்டுவந்தும் மீன் மற்றும் கடல் வளங்களைச் சூறையாடும் இந்தியக் கடல் கொள்ளையர்கள் விடயத்தில் இந்திய மத்திய அரசுக்கு கடும் அழுத்தம் கொடுப்பதுடன் மிகக் கடுமையான நடவடிக்கையை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும். அத்துடன் சட்டவிரோதமான பாரிய இழுவைப் படகுகளுடன் எல்லை தாண்டும் இந்திய மீனவர்கள் விடயத்தில் இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்படும்.
10. வடக்கு விவசாய மேற்பாட்டிற்கான நுணுக்கங்கள், விஞ்ஞானப் பொறிமுறை, ஏற்றுமதித் திட்டங்கள் தொடர்பாக புலம்பெயர் தமிழர்கள் மற்றும் தமிழக விவசாயிகள் ஆலோசனையுடன் திட்டங்கள், முதலீடுகளை விரிவாக்க முழுமையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
11. வடக்கு மக்களின் பயணச் சிரமங்கள் செலவுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நடவடிக்கையாக யாழ்ப்பாணத்தில் “கடவுச்சீட்டு” *(passport)* காரியாலயம் அமைக்க அரசிடம் கோரிக்கை வைக்கப்படும்.
12. மூவின மக்களும் நாட்டின் பொருளாதரத்தை கருத்திற்கொண்டு இணைந்த முதலீடுகளுடன் தொழில் புரிவதற்கான புரிந்துணர்வு, பாதுகாப்பு தொடர்பாக ஆராயப்படும்.
13. இனச்சிக்கலுக்கான தீர்வு என்கிற முடிவில் சர்வதேசத் தலையீட்டுடன் **“பொதுவாக்கெடுப்பு”** கோரப்படும்.
14. தமிழ் பத்திரிகையாளர்கள், செய்தியாளர்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராக உள்நாட்டு, சர்வதேச மட்டம் இணைந்த ஒரு பொறிமுறை உருவாக்கப்படும்.
15. கல்வி, சட்டம், அதிகாரம் சமமாகக் கிடைக்க வேண்டும்.

*இதுவே தீர்வின் முதற்கட்டமாகும்.*



**“லாந்தர்” சின்னத்தில் போட்டியிடும் சுயேட்சை 21**
**எம்மை ஆதரித்து வாக்களித்து வெற்றிபெறச் செய்யும்படி எம் மக்களை வேண்டுகின்றோம்.**

**பா.கேதீஸ்வரன்**
**தலைவர்**
**சுயேட்சை 21**
**யாழ்-கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்**



இப்பத்திரிகை 24.10.2024 அன்று இல.12/1 செங்குந்த அங்காடி, பருத்தித்துறை வீதி, யாழ் / நல்லூர் பணிமனையில் உள்ள அகரவ் பப்ளிசிங் மீடியா பிறிண்டிங் ஹவுஸ் (பிறைவேற் லிமிட்ரெட்) நிறுவனத்தினரால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.